Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 மாசி 16 ஆம் நாள், ஹிஜ்ரி 1426 முஹறம் 07 (28.02.2004) சனிக்கிழமை இதழ் :150

TOSHIBA

TOSHIBA போட்டோ கொப்பியர்கள், ரோணர்கள், உதிரிப்பாகங்களையும் மற்றும் அனைத்துவிதமான கணனிகள், கணனி உதிரிப்பாகங்களையும் யாழ்.நகரிலேயே மிகக்குறைந்த விலையில் உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளக்கூடிய ஒரே ஒரு நிறுவனம்.

ஜப்பானிய தொழில்நுட்பத்துடன் கூடிய உலகத்தரம் வாய்ந்த TOSHIBA உற்பத்திகளுக்கான வட இலங்கையின் ஏகமுகவர்

IIS Office Automation

No. 360/3, Main Street, Jaffna. T.P No: 222 7676 / 4 590 190

# சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதற்கு உதவி வழங்கும் நாடுகளின் ஆதரவு தேவை!

## நோர்வே வெளிவிவகார அமைச்சர்

(ஒஸ்லோ)

**இலங்கையின் சமாதான முயற்சியில் பங்கெடுத்துள்ள அனைத்துத் தரப்பினரும் குறிப்பாக உதவி வழங்கும் நாடுகள் சமாதானமுயற்சியை முன்னெடுத்துச்செல்ல உதவவேண்டும் என நோர்வே அரசின் வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்ஸன் கேட்டுள்ளார்.**

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவாவது -

இலங்கையின் மீள்கட்டுமானம் மற்றும், அபிவிருத்திப் பணிகளுக்கு உதவி வழங்கும் நாடுகள் தமது பங்களிப்பை தொடர்ந்து செய்யும் என நான் நம்புகின்றேன்.

அத்துடன், இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு, இலங்கையின் ஸ்திரத் தன்மையைப் பேணும் வகையில் தனது கடமையைச் சிறப்பாகச் செய்து வருகிறது.

ஏப்ரல் மாதம் இரண்டாம் திகதி நடைபெறவுள்ள பொதுத்தேர்தலுக்குக் கூட கண்காணிப்புக் குழு நாட்டின் ஸ்திரத்தன்மையைப் பேண

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வீடு சின்னத்திற்கு எதிராக உயர்நீதிமன்றில் வழக்கு!

### இம்முறை தேர்தலுக்கு பயன்படுத்தலாம்

(கொழும்பு)

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர், தமிழரசுக்கட்சியின் 'வீடு' சின்னத்தைப் பயன்படுத்துவதற்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் மனு ஒன்று தாக்கல் செய் யப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

தமிழரசுக்கட்சியின் தற்போதைய தலைவரெனக் கூறப்படும் ஆவரங்கால் சின்னத்துரை என்பவரே இந்த மனுவைத் தாக்கல் செய்திருப்பதாக தெரியவருகிறது. இது தொடர்பாக தற்போது லண்டனில் வசிக்கும் ஆவரங்கால் சின்னத்துரை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு சுதந்திர முன்னணி அர்ப்பணிப்புடன் செயற்படும்!

### அமைச்சர் கதிர்காமர் கூறுகிறார்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாண அர்ப்பணிப்புடன் செயற்படும் என தகவல் தொலைதொடர்பு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் உறுதியளித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

பேச்சுக்களில் ஐக்கிய தேசியக் கட்சி உட்பட சகல கட்சிகளின் அபிப்பிராயங்களும், ஆலோசனைகளும் நாடப்படும். அத்துடன் பேச்சுக்கள் யதார்த்த பூர்வமாகவும் வெளிப்படையாகவும் இடம்பெறும். பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் மேற்கொள்ளப்பட்ட சமாதான முயற்சியில் உள்ள குறைபாடுகள் பலவற்றைச் சீர்செய்வதற்கு ஜனாதிபதி சந்திரிகா நடவடிக்கை எடுப்பார்.

சமாதானப் பேச்சுக்கள் நேர்மையாகவும் கிரமமாகவும் ஒளிவுமறைவின்றியும் மேற்கொள்ளப்படவேண்டும் என மக்கள் எதிர்பார்க்கின்றனர். ஐக்கிய தேசியக் கட்சியோ

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பொங்கு தமிழ் நிகழ்வு புலம்பெயர் நாடுகளிலும்!

புலம்பெயர்ந்து வாழும் ஈழத் தமிழர்கள் மாபெரும் பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வொன்றை எதிர்வரும் ஏப்ரல் மாதம் நடத்தவுள்ளனர்.

ஐ.நா. சபையை நோக்கி இவர்கள் மாபெரும் பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வை முன்னெடுக்கவுள்ளனர்.

ஏப்ரல் 5ஆம் திகதி இடம்பெறவுள்ள இந்தப் பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வு மூலம் தமிழ் மக்களின் எழுச்சி - தமிழ் மக்களின் விடிவு குறித்து சர்வதேச சமூகத்துக்கு அழுத்தம் கொடுப்பதே நோக்கம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## தமிழீழ தேசிய பெரு விளையாட்டு விழா கிளிநொச்சியில் நேற்று நிறைவடைந்தது!

(கிளிநொச்சி)

தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் கடினமான பயிற்சி

மூன்றாவது தமிழீழ தேசிய பெரு விளையாட்டு விழாவில் வீரர்களுக்கான பரிசளிப்பு

## யுத்தம் பாதித்த மக்களுக்கான உதவியை தொடர்ந்து வழங்குக!

# கிளிநொச்சியில் நேற்று நிறைவடைந்தது!

(கிளிநொச்சி)

தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் கடினமான பயிற்சி, இலகுவான வெற்றி என்ற தாரக மந்திரத்துக்கு அமைவாகவே மூன்றாவது தமிழீழ தேசிய பெரு விளையாட்டு விழா நடைபெற்று நிறைவடைந்திருக்கிறது என விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர் க.வே.பாலகுமாரன் தெரிவித்தார்.

மூன்றாவது தமிழீழ தேசிய பெரு விளையாட்டு விழாவில் வீரர்களுக்கான பரிசளிப்பு விழாவில கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது -

குருதி சிந்தி போராடி வெற்றி பெற்ற இந்த மண்ணில் வியர்வை சிந்தி போராடிய உங்களை நாங்கள் வரவேற்கிறோம். இந்த

(12 ஆம் பக்கம் பார்க்க)

# முறிகண்டி வாகன விபத்தில் ஒருவர் பலி; 10 பேர் படுகாயம்!

(கிளிநொச்சி)

கிளிநொச்சி முறிகண்டிப் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்து ஒன்றில் ஒருவர் மரணமடைந்தார். 10 பேர் படுகாயம் அடைந்தனர்.

நேற்றுமுன்தினம் இரவு இந்த விபத்து இடம்பெற்றது. வவுனியாவைச் சேர்ந்த சிவ சுப்பிரமணியம் என்பவரே இந்த விபத்தில் இறந்ததாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

கடந்த மூன்று நாட்களுக்கு முன்னர் புளியங்குளம் பகுதியில் வீதி விபத்தில் இறந்த இளைஞனின் மரணச் சடங்குக்குச் சென்று விட்டு திரும்பிக்கொண்டிருந்தபோது - எதிரில் வந்த கன்ரர் ரக லொறியுடன் இவர்கள் பிரயாணம் செய்த வாகனம் மோதியதால் இந்த விபத்து இடம்பெற்றது.

வாகன சாரதி மதுபோதையில் வாகனத்தைச் செலுத்தியதாக ஆரம்ப விசாரணை

(12 ஆம் பக்கம் பார்க்க)

# உதவியை தொடர்ந்து வழங்குக!

## ஐ.நா.செயலர் கோபி அனான் கோரிக்கை

இலங்கையில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு வழங்கப்படும் உதவிகளை இடைவிடாது தொடர்ந்து வழங்குமாறு சர்வதேச நாடுகளிடம் - ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் கோபி அனான் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கையில் நிலவும் நெருக்கடி நிலையை கருத்திற்கொண்டே ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது -

அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சை இதன் மூலம் துரிதமாக ஆரம்பிக்க முடியும். சமா

(12 ஆம் பக்கம் பார்க்க)

# பாதுகாப்பு உடன்படிக்கை குறித்து இந்தியாவே தீர்மானிக்க வேண்டும்!

## - அமைச்சர் பீரிஸ்

இந்திய - இலங்கை பாதுகாப்பு உடன்படிக்கையை செய்துகொள்வதற்கான உகந்த நேரம் எது என்பதை இந்திய அரசாங்கமே தீர்மானிக் வேண்டும் என நீதி அரசியலமைப்பு விவகார அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான ஜீ.எல் பீரிஸ் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது -

இந்தியாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொள்வது தொடர்பாக நாமே முதலில் பேச்சுவார்த்தையை ஆரம்பித்தோம்.

இந்த ஒப்பந்தம் அவசியம் தானா? இதை எப்போது மேற்கொள்வது என்பது தொடர்பாக இந்திய அரசாங்கமே தீர்மானிக்க வேண்டும்.

இந்தியாவுடன் பாதுகாப்பு ஒப்பந்தத்தை

(12 ஆம் பக்கம் பார்க்க)



# பிரயோசனமற்ற பொதுத் தேர்தல்; வாக்குகளை செல்லுபடியாக்குக!

## புதிய ஜனநாயகக் கட்சியின் செயலாளர்

எதிர்வரும் நாடாளுமன்ற பொதுத் தேர்தல் தமிழ்மக்களுக்கோ, சிங்கள மக்களுக்கோ, முஸ்லிம் மக்களுக்கோ ஏன் மலையக மக்களுக்கோ எந்த வொரு விமோசனத்தையும் தரமுடி யாததோர் தேர்தல் இத்தேர்தல்.

ஆளும் வர்க்கத்துக்கும், வசதி படைத்தவர்களுக்கும் ஒரு திரு விழா. ஆனால், சாதாரண மக்க ளைப் பொறுத்தவரை இது துன்ப துயரங்களை மட்டுமே வழங்கும். அத்துடன், இனவாதம் இதன் மூலம் இன்னோர் கட்டத்திற்கு நகர்த்தப் படும். எனவேதான் இந்தத் தேர்தல் ஓர் அர்த்தமற்ற தேர்தலென நாம் கருதுகின்றோம் என புதிய ஜனநா யகக் கட்சியின் செயலாளர் க.செந்தி வேல் தெரிவித்தார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் தமது கட்சி போட்டியிடாமைக்கான காரணத்தைத் தெரிவிப்பதற்காகவும், தேர்தல் தொடர்பான தமது நிலைப் பாட்டை விளக்கவும் பத்திரிகையா ளர் மாநாடு ஒன்றை அவர் நேற்று முன்தினம் நடத்தினார். ஸ்ரான்லி வீதியிலுள்ள கட்சியின் பணிமனையில பிற்பகல் 4 மணிக்கு இந்தப் பத்திரி கையாளர் மாநாடு இடம் பெற்றது.

அங்கு அவர் மேலும் உரையாற் றுகையில்,

இது ஒரு தேவையற்ற தேர்தல். அத்துடன், மக்கள் மீது திணிக்கப் பட்ட தேர்தலும்கூட. அத்துடன், அது வெவ்வேறு காரணங்களைக்கூறி வந்தபோதும் சாதாரண மக்கள் மீது திணிக்கப்பட்ட தேர்தல் என்பதை நாம் எடுத்துக்கொண்ட முடிவின் மூலம் வெளிப்படுத்தப்போகின்றோம்.

அதற்கான எமது எதிர்ப்பை தெரிவிக்க மக்கள் தமது வாக்கு களை செல்லுபடியற்றதாக்க வேண் டுமென அழைப்பு விடுக்கின்றோம் எனவும் தெரிவித்தார்.

ஒரு தேர்தலில் எப்படி புள்ளடி போடுங்கள் எனக் கேட்கும் உரிமை ஒரு ஜனநாயக நாட்டில் உள்ளதோ. அதேபோன்று தேர்தலை செல்லுபடி யற்றதாக்க அழைப்பு விடுப்பதற் கான உரிமை எமக்குண்டு.

இதனடிப்படையிலேயே 2004 ஆம் ஆண்டிற்கான பொதுத்தேர் தலில் எந்த மாவட்டத்திலும் போட் டியிடுவதில்லை என்ற முடிவிற்கும், வாக்குகளைச் செல்லுபடியற்றதாக் கும் மக்கள் இயக்கம் ஒன்றை முன் னெடுக்கும் முடிவிற்கும் வந்துள் ளோம் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை - எதிர்வரும் பொதுத்தேர்தலில் தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு தங்கள் கட்சி ஆதர வளிக்குமா என எழுப்பப்பட்ட கேள் விக்கு -

அவர்களை நாம் ஆதரிக்கவோ அல்லது எதிர்க்கவோ இல்லை என் றார்.

இது ஜனநாயக ரீதியில் நாங்கள் எடுத்த முடிவேயாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (202)

# இல்ல விளையாட்டுப் போட்டிகள்

(காங்கேசன்துறை)

இளவாலை புனித ஹென்றியரசா கல்லூரியும் இளவாலை கன்னியர் மடம் மகா வித்தியாலயமும் இணைந்து நடாத்தும் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறும் இந்த நிகழ்விற்கு பிரதம விருந்தினராக மாகாண கல்வி அதிகாரி மகாலிங் கமும் சிறப்பு விருந்தினராக வலிகா மம் வலய கல்வி பணிப்பாளர் றெஜினா இருதயநாதரும் கலந்து கொள்வர். (71)

✪ ✪ ✪ ✪ ✪ ✪ ✪

(யாழ்ப்பாணம்)

வலி.தெற்கு பிரதேச செயலர் பிரிவின் வருடாந்த விளையாட்டு போட்டி நாளை மறுதினம் பி.ப 2.30 மணிக்கு சுன்னாகம் ஸ்கந்தவரோத யாக் கல்லூரி மைதானத்தில் நடை பெறவுள்ளது.

உடுவில் பிரதேச செயலர் எஸ். திருவாகரன் தலைமையில் நடை பெறவுள்ள இந்தநிகழ்வில் மல் லாகம் நீதிமன்ற நீதிவான் சஜோஜினி இளங்கோவன் சிறப்பு விருந்தி னராக கலந்து கொள்வார்.

(யாழ்ப்பாணம்)

யாழ்.கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய இல்ல மெய்வன் மைப் போட்டி பாடசாலை அதிபர் வி.மாணிக்கம் தலைமையில் நாளை பி.ப 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதமவிருந் தினராக புனர்வாழ்வு - புனரமைப்பு அமைச்சின் செயலாளர் அ.ஜெயரட் ணமும், சிறப்பு விருந்தினராக உடற் கல்வி ஆலோசகர் த.சிவகுமாரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

✪ ✪ ✪ ✪ ✪ ✪ ✪

## ஆசிரியர்களுக்கான செயலமர்வு

தீவக வலயத்திற்குட்பட்ட பாட சாலைகளில் கடமையாற்றும் ஆரம்ப பிரிவு ஆசிரியர்களில் தேர்ந் தெடுக்கப்பட்ட ஆசிரியர்களுக்கான ஆரம்ப கணித பயிற்சி, சேவைக் கால செயலமர்வு ஊர்காவற்றுறை கோட்டக்கல்வி அலுவலக மண்ட பத்தில் இன்று ஆரம்பமாகி அடுத்த மாதம் 6,13,9 ஆம் திகதிகளில் காலை 8.00 மணிமுதல் மாலை 5.00 மணிவரை நடைபெறவுள்ளது.

இச் செயலமர்வில் தெரிவு செய் யப்பட்ட ஆசிரியரை பங்குபற்று வதற்கு ஆவன செய்யுமாறு பாடசா லை அதிபர்கள் வலயக்கல்விப் பணிப்பாளரால் கோரப்பட்டுள்ளனர். (83)

# எழுவைதீவில் கல்வியை மேம்படுத்த நடைபெறும் மாலை நேர வகுப்புகள்!

எழுவைதீவு முருகவேள் வித்தி யாலயத்தில் மாலை நேர இலவச வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன.

பாடசாலை ஆசிரியர்களால் வாரத தில் செவ்வாய், புதன், வியாழன் ஆகிய மூன்று நாட்களும் மாலை 4 மணி முதல் 6 மணிவரை இந்த வகுப்புகள் நடத்தப்பட்டு வருகிறது.

பாடசாலை மாணவர்களின் கல்வி நிலையை மேம்படுத்தும் நோக்கிலும கல்வி கற்பதில் ஆர்வத்தை தூண்ட இவ்வகுப்பு ஆரம்பிக்கப்பட்டு நடத் தப்பட்டு வருவதாக கல்லூரி அதிபர் தி.சிவபாலன் தெரிவித்தார்.

ஆரம்பக்கல்வி, கணிதம், தமிழ், விஞ்ஞானம், ஆங்கிலம் மற்றும் சமூ கக்கல்விப்பாடங்கள் மட்டும் மாலை நேர வகுப்புக்களில் நடைபெற்று வரு கின்றது.

அத்துடன், மாணவர்களை சுய கற்றலில் ஈடுபடுத்தும் நோக்கில் இரவு நேரத்தில் பாடசாலையில் கற்பதற் குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகவும் அதிபர் மேலும் தெரி வித்தார். (83)

## கால்நடை வளர்ப்போருக்கு விசேட கலந்துரையாடல்

மட்டுவில் வடக்கு ஸ்ரீ வேற்பிள்ளை சனசமூக நிலையத்தில் இன்று காலை 9 மணி முதல் மாலை 1 மணி வரை கால்நடை வளர்ப்பும், அவற்றிற் குண்டாகும் நோய்கள் பற்றியும் கலந்துரையாடல் நடைபெறவுள்ளது. 'அம்டா' நிறுவனத்தின் அனுசர ணையுடன் நடைபெறும் இக்கலந் துரையாடலில் அனைவரையும் கலந்து பயன்பெறுமாறு அறிவிக்கப் பட்டுள்ளது. மறுநாள் மேற்படி கலந் துரையாடலில் பங்குபற்றியவர்களது வளர்ப்புப்பிராணிகள் பார்வையிடப்பட்டு பரிகாரமும் வழங்கப்படவுள்ளது. (24)



வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா வில் கலந்துகொண்ட வடமராட்சி வலயப் பிரதி கல்வி பணிப்பாளர் வி.அருளானந்தம் திருமதி.அருளானந்தம் மற்றும் யாழ்.மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் என்.சிவராஜசிங்கம் மற்றும் ஆசிரியர்கள், மாணவர் கள் ஆகியோரை கல்லூரி அதிபர் கனகரத்தினம் அழைத்துச் செல்வதைக் காணலாம். (17)

# பதவியுயர்வுக் கடிதம் தாமதம் செயலகம் மீது முறைப்பாடு!

## கிராமசேவையாளரால் தாக்கல்

(யாழ்ப்பாணம்)

தனது பதவி உயர்வுக் கடிதத்தை உரிய காலத்தில் வழங்காததை எதிர்த்து யாழ்.செயலகத்திற்கு எதிராக கிராமசேவையாளர் ஒருவர் நேற்று யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடொன் றைச் செய்துள்ளார்.

அந்த முறைப்பாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

நீண்ட காலமாக கிராமசேவை உத்தியோகத்தராக் பணிபுரியும் தான் கடந்த முறை நடைபெற்ற கிராமசேவையாளர் பதவி உயர் வுக்கான நேர்முகத் தேர்வில் பங்கு கொண்டதாகவும் அதன் பிரகாரம் கிராமசேவையாளர் தரம் 1 இற்கு தன்னைத் தெரிவு செய்யப்பட்ட மைக்கான கடிதம் கொழும்பிலி ருந்து அனுப்பிவைக்கப்பட்டுள்ள போதிலும், ஒன்றரை மாதங்களுக் கும் மேலாக கடிதம் யாழ்.செயல கத்திற்கு வந்து கிடப்பில் போடப் பட்டிருந்தமையானது மனித உரிமை மற்றும் செயல் எனவும் அந்த முறைப் பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)

## 22வது ஆண்டு நிறைவுவிழா

(கொக்குவில்)

சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசத்தின் 22 ஆவது ஆண்டு நிறைவு விழா நாளைக் காலை 9.00 மணியிலிருந்து மாலை 6.00 மணி வரை முழுநாள் விழாவாக யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற வுள்ளது.

அத்துடன், புனர்வாழ்வு, கல்வி அபிவிருத்தி நிதியமும் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மேற்படி இந்தநிகழ்வில் 5 ஆம் ஆண்டுப் புலமைப்பரிசில், க.பொ.த (சா/த) பரீட் சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களுக்கான புலமைப் பரிசில் வழங்கப்பட இருக்கிறது. (206)

## வர்த்தகர்களுக்கான கலந்துரையாடல்

யாழ்மாவட்டத்திலுள்ள அனைத்து வர்த்தக சங்க நிர்வாகசபை உறுப் பினர்களுக்கு, இன்றைய அரசியல் நிலைபற்றிய கலந்துரையாடல் நாளை காலை 10 மணிக்கு யாழ்.வணிகர் கழக பணிமனையில் நடைபெற வுள்ளது.

அனைத்து வர்த்தகர் சங்க நிர் வாகசபை உறுப்பினர்களையும் தவ றாது கலந்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட அரசியற்துறையினர் அறி வித்துள்ளனர்.

**THE ROYAL COLLEGE OF JAFFNA**

ஆண்டு 1 இல் இருந்து 11 வரை எல்லாப் பாடங்களும், GRAMMAR,SPOKEN EN-GLISH மேற்படிப்பு வரை.

பதிவுக்கு : அதிபர், 426 (302), K.K.S வீதி, யாழ்ப்பாணம். (646)

**சிறுவிளம்பரம்**

**சித்த மருத்துவ சேவை**

இருதயநோய், நீரிழிவு, நரம்புத்தளர்ச்சி, வெண்புள்ளி, சிறுநீரகநோய், பாலியல் குறைபாடு, குழந்தை நோய், நோவு, முறிவு எல்லா நோய் களுக்கும் சித்த மருந்துகள், எண் ணெய்கள் பெற்றுக்கொள்ளலாம். பேரறிஞர்.டாக்டர்.பாலசுப்பிரமணியம், சித்த வைத்திய ஆராய்ச்சி நிலை யம், காங்கேசன்துறை வீதி, மதவடி, சுன்னாகம். (மாசி 28 முதல் பங்குனி 2 வரை சந்திக்கவும்) (647)

**மில்க்வைற் செய்தி**

மூன்று மில்க்வைற் சோப் மேலுறைகளை அனுப்பி மாசி மாத மில்க் வைற் செய்தி ஒன்றைப் பெற்றுக் கொள்ளவும்.

மில்க்வைற் தொழிலகம்,
த.பெ. இல. 77,
யாழ்ப்பாணம். (சி/2222)

நிறஞ்சனாஸ் சங்கானை

விக்ரம், த்ரிஷா நடித்த

சாமி

காட்சி நேரம் : 11.00. 2.45. 6.00.(பு.நே.)
வெள்ளி. சனி. ஞாயிறு : இரவு 8.45 (பு.நே)

CHICACO (சி-2196)

ராஜா யாழ்ப்பாணம்.

பார்த்தீபன், விக்னேஸ் நடித்த




10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே) (சி-2197)

யசோ இறபர் ஸ்டாம்


75/=


பொலிமர் கொம்பியூட்டர் இறபர் சீல் ரூபா 75/= மட்டுமே

யசோ (PVT) லிமிட்டட்,
35, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம். (சி/2152)

தில்லையம்பதி

GREAVES





மோட்டோர்ஸ்

இல.236, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 222 2488, 021 - 2223820
AGENTS FOR - GREAVES, SPARE PARTS
விவசாய நீர் இறைக்கும் இயந்திரம், மின்சார நீர் இறைக்கும் இயந்திரம் மற்றும்
உதிரிப்பாகங்கள் விற்பனையாளர்கள்,
மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

(சி-1499)

# 645 பிக்குகளை கொலை செய்த ஜே.வி.பி பௌத்த கட்சியா?

## சம்பிக்க ரணவக்க கேள்வி

பௌத்த பிக்குகள் 645 பேரைக் கொலை செய்த ஜே.வி.பி, இன்று எவ்வாறு தம்மை உண்மையான சிங்கள பௌத்த கட்சியென்று மார்தட்டிக்கொள்ள முடியும் என்று, ஜாதிக ஹெல உறுமயவின் செயலாளர் சம்பிக்க ரணவக்க கேள்வியெழுப்பினார்.

கொழும்பு நாரஹென்பிட்டியிலுள்ள, ஜாதிக ஹெல உறுமயவின் தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர் -

1986 ஆம் ஆண்டு ஏப்ரல் 15ஆம் திகதி, ஜே.வி.பி.யின் மத்திய குழுக் கூட்டத்தில், பௌத்த மதத்திற்கு அரசாங்க அங்கீகாரம் வழங்கப்படமாட்டாது என்றும், அரசியல் பிரச்சினைகளுக்குள், பௌத்த குருமார் தலையிடக்கூடாது என்றும், பௌத்த விகாரைகளுக்குச் சொந்தமான அரச காணிகளை, அரச உடமையாக்குவதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, கொள்கையாக ஏற்றுக்கொள்ளப்பட்டதாகவும் குறிப்பிட்டார்.

இந்த நடவடிக்கைக்கு ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க ஆதரவு வழங்கியதாகவும் குறிப்பிட்டுள்ளதுடன், இதுவே ஜே.வி.பி.யின் சுயரூபம் என்றும், அரசியல் பதவி ஆசையினாலேயே, அவர்கள் உண்மையான சிங்கள பௌத்த கட்சியென்று தம்மை கூறிக்கொள்வதாகவும், சம்பிக்க ரணவக்க மேலும் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் கண்டெடுத்த

# இளம் பெண்ணின் சடலம் கொழும்புக்கு அனுப்பிவைப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கல்வியங்காடு கிறிஸ்தவ தேவாலய சேமக்காலையில் நேற்று முன்தினம் அரைகுறையாக எரிந்தநிலையில் கண்டெடுக்கப்பட்ட பெண்ணின் சடலம் மேலதிக பிரேத பரிசோதனைகளுக்காக நேற்று கொழும்பிற்கு அனுப்பி வைக்கப்பட்டது.

உயிரிழந்தவர் மட்டக்களப்பு கல்லடியைச்சேர்ந்த கபிரியேல் லூர்த்மேரி (வயது 42) என்பவரென அடையாளம் காணப்பட்டது. இந்தச் சடலத்தின் அருகில் மண்ணெண்ணெயுடன் ஒரு கானும், தீப்பெட்டி ஒன்றும் கண்டெடுக்கப்பட்டது.

எனவே, இது யாராவது திட்டமிட்டு செய்த கொலையா, அல்லது தற்கொலையா என்று கண்டறியும் பொருட்டே இந்தச் சடலம் கொழும்பிற்கு அனுப்பிவைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# பயங்கரவாதப் பிரச்சினையே உள்ளது இனப்பிரச்சினை எதுவும் கிடையாது!

## மேதானந்த தேரர் கூறுகிறார்.

(கொழும்பு)

நாட்டில் தற்போது பயங்கரவாத பிரச்சினையே நிலவுகின்றது.

இதனை இனப்பிரச்சினை என்று கூறமுடியாது என்று, ஜாதிக ஹெல உறுமயவின் அமைப்பாளர் எல்லன் வெல மேதானந்த தேரர் தெரிவித்தார்.


கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டம் ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் -

எதிர்காலத்தில் எமது நாடு இரண்டாகப் பிளவுபடும் நிலை உருவாகியுள்ளது. இந்த நெருக்கடியான நிலையில் இருந்து மக்கள் நாட்டைப் பாதுகாக்கவேண்டும். நாட்டில் நிலவுகின்ற பயங்கரவாதப் பிரச்சினையை அரசியல்வாதிகள் இனப்பிரச்சினையாக மாற்றுகின்றனர். இதனால், அரசியலை புறம்தள்ளி அனைவரும் ஒன்றுபடவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# தேர்தல் வன்முறைகளைத் தடுக்கும் பணியில் படையினர்

நாடு முழுவதும் நடைபெறும், தேர்தல் வன்முறைகளைத் தடுக்கவென,. நேற்றுமுதல் படையினர், பொலிஸாருடன் இணைந்து, பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட்டுள்ளதாக, பொலிஸ் மா அதிபர் இந்திர டி சில்வா தெரிவித்தார்.

அத்துடன், தேர்தல் வன்முறைகளுடன் சம்பந்தப்பட்ட, நபர்களைக் கைதுசெய்து, நீதிமன்றத்தில் நிறுத்துமாறு அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் உத்தரவிடப்பட்டுள்ளது. படைகளிலிருந்து தப்பியோடியவர்களே இவ்வாறான தேர்தல் வன்முறைச் சம்பவங்களில் கூடுதலாக ஈடுபடலாம் எனவும், பொலிஸ் மா அதிபர் இந்திர டி சில்வா மேலும் தெரிவித்தார்.



நேற்றுமுன்தினம் அநுராதபுரத்தில் தேர்தல் பிரசாரத்தை ஆரம்பித்த ஜனாதிபதி சந்திரிகா மற்றும் மகிந்த ராஜபக்ஷ.

# ஓய்வூதிய முரண்பாட்டை நீக்க அரசாங்கம் நடவடிக்கை

## கடந்த ஜனவரி முதல் அமுலுக்கு வருகிறது

(கொழும்பு)

கடந்த ஜனவரி மாதம் முதல் அமுலுக்கு வரும் வகையில் ஓய்வூதிய முரண்பாடுகள் நீக்கப்பட்டுள்ளதாகவும், இதன்மூலம் ஆசிரிய சேவையில் இருந்து ஓய்வு பெற்றவர்கள் பெரியளவிலான நன்மை அடைவார்கள் என்றும் பொதுநிர்வாக அமைச்சர் வஜிர அபயவர்த்தன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர்கள் மகாநாட்டிலே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

1996 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியும் அதற்கு முன்னரும் ஓய்வுபெற்றவர்களுக்கு, இந்தத் திருத்தம் அமுல்படுத்தப்படும்.

இதற்கமைய குறிப்பிட்டகாலத்தில் ஓய்வுபெற்ற அரச ஊழியர்களின் ஓய்வூதியத்திலேயே இந்தத் திருத்தம் மேற்கொள்ளப்பட்டது.

புதிய சுற்று நிருபத்துக்கான ஆவணங்கள் தயாரிக்கப்பட்டுவருகிறது.

இந்த முரண்பாட்டை நீக்குவதற்காக, அரசாங்கம் சுமார் 3 மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட தொகையை செலவிடவேண்டியுள்ளது.

இதன்படி முதல் நடவடிக்கையாக எக்கநாயக்க அறிக்கையை நடைமுறைப்படுத்த இருப்பதாகவும், இதற்கு அரசாங்கத்துக்கு சுமார் 2 பில்லியன் ரூபா தேவைப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

# அழைப்புக் கட்டண அறவீடு; உயர் நீதிமன்றம் தடையுத்தரவு!

இணைப்புத் தொலைபேசிகளிலிருந்து கையடக்கத் தொலைபேசிகளுக்கு எடுக்கப்படும் அழைப்புக்களுக்கு, இணைப்புத் தொலை பேசி உரிமையாளரிடம் கட்டணம் அறவிடுவதற்கு எடுக்கப்பட்ட புதிய கட்டண முறைக்கு, மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்றுமுன்தினம் இடைக்காலத் தடையுத்தரவை வழங்கியது.

தொலைத்தொடர்பு ஆணைக் குழுவிற்கு இந்த இடைக்காலத் தடையுத்தரவு விதிக்கப்பட்டது.

கோகந்தரப் பிரதேசத்திலுள்ள இணைப்புத் தொலைபேசி உரிமையாளர் பி.பந்துவங்கல தாக்கல் செய்த மனுவொன்றை, நேற்றுமுன்தினம் விசாரணை செய்த நீதிமன்றம் இந்த இடைக்கால உத்தரவை வழங்கியது.

புதிய கட்டணமுறையால் பல்வேறு அசௌகரியங்கள் இணைப்புத் தொலைபேசியாளர்களுக்கு ஏற்பட்டுள்ளதாக மனுதாரர் குறிப்பிட்டிருந்தார்.

இந்த மனுவில் பிரதிவாதியாகக் குறிப் பிடப்பட்ட, தொலைத்தொடர்பு ஆணைக்கு முவை எதிர்வரும் மார்ச் மாதம் 10 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உத்தர விடப்பட்டுள்ளது.

# நாட்டை அமைதியாக வழிநடத்தியது ஐ.தே.க. அரசுக்கு பெருவெற்றி

## அமைச்சர் பீரிஸ் கூறுகிறார்

(கொழும்பு)

கடந்த இரண்டு வருடங்களாக நாட்டை அமைதியாக வழிநடத்தியமை ஐக்கிய தேசிய அரசாங்கத்துக்குக் கிடைத்த மிகப்பெரிய வெற்றி என்று, நீதி அரசியலமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்தார்.

இந்த சமாதானச் சூழ்நிலையில் தான் நாட்டின் பொருளாதாரம் பலம் வாய்ந்ததாக மாற்றம்பெற்றது.

விசேடமாக நாட்டை முன்னேற்றப்பாதைக்கு இட்டுச் செல்வதற்காக சர்வதேச சமூகம் 4.5 மில்லியன் அமெரிக்க டொலரினை கடனாக வழங்கமுன்வந்தது.

மக்கள் விடுதலை முன்னணி, சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் சிலரும் சமாதான நடவடிக்கைகளை விமர்சனம் செய்யவும், சீர்குலைக்கவும் நடவடிக்கை எடுத்ததாகவும், பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் விடுத்த அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

# இனப்பிரச்சினைத் தீர்வுக்கு கட்சிகள் ஒத்துழைக்கவேண்டும்

## லங்கா சமசமாசக் கட்சி கோரிக்கை

வடக்கு - கிழக்கு பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கு அனைத்து அரசியற் கட்சிகளும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்று லங்கா சமசமாசக் கட்சி அழைப்பு விடுத்திருக்கிறது.

இது தொடர்பாகக் கட்சியின் பொதுச்செயலாளர் பட்டி வீரக்கோன் விடுத்திருக்கும் அறிக்கையில்,

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல் இந்தப் பிரச்சினைக்கு தீர்வைத் தேடுவதாக அமையவேண்டும். சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைத்துவம் இந்தப் பிரச்சினைக்கு சரியானதொரு தீர்வைக்காண ஒத்துழைப்பு வழங்கும் என்று, லங்கா சமசமாசக் கட்சி நம்புகிறது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# பாதுகாப்பை அதிகரிக்குமாறு விக்னேஸ்வரன் கோரிக்கை

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் திருமலை மாவட்டத்தில் ஈ.பி.டி.பியினர் சார்பில் போட்டியிடவுள்ள கலாநிதி விக்னேஸ்வரன், தனது பாதுகாப்பை மேலும் பலப்படுத்துமாறு திருமலை நகர பொலிஸ் அதிகாரி நிசந்த தஸநாயக்காவைக் கேட்டுள்ளார்.

இவரது கோரிக்கையை ஏற்றுக்கொண்ட பொலிஸ் அதிகாரி, பாதுகாப்பை பலப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்தார்.

இதேவேளை, இவர் தற்போது பொலிஸ் பாதுகாப்பிலேயே தங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (04)

# தமிழ்த் தேசிய கூட்டமைப்பினருக்கு வேட்பாளர் இலக்கம் வழங்கப்பட்டது

எதிர்வரும் நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிடவுள்ள தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் வேட்பாளர்களுக்கான - வேட்பாளர் இலக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இவர்களது வேட்பாளர் இலக்கங்களை நேற்றையதினம் மட்டக்களப்பு மாவட்ட தேர்தல் தெரிவித்தாட்சி அதிகாரி வழங்கினார்.

இதன்படி - அரியநேத்திரன் பாக்கியச்செல்வம் - 1 ஆம் இலக்கத்தையும், கிங்ஸ்லி இராசநாயகம் இரண்டாம் இலக்கத்தையும், தங்கேஸ்வரி மூன்றாம் இலக்கத்தையும், பன்மென்போடி - கனகசபை நான்காம் இலக்கத் தையும், இராஜன் சத்தியமூர்த்தி ஐந்தாம் இலக்கத்தையும், ஜோசப் பரராஜசிங்கம் ஆறாம் இலகத்தையும், சுப்பிரமணியம் அரசரத்தினம் ஏழாம இலக்கத்தையும், ஜெயானந்தமூர்த்தி எட்டாம் இலக்கத்தையும் பெற்றுள்ளனர்.

# இலங்கையைத் தோற்கடித்ததன் மூலம் இந்தியா அரையிறுதிக்குச் சென்றது

ICC U/19 CRICKET WORLD CUP BANGLADESH 2004

பங்களாதேஷில் நடைபெற்று வரும் 19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியில் நேற்றுமுன்தினம் டாக்காவில் நடந்த இருவேறு ஆட்டங்களில் இந்தியா - இலங்கையையும், மேற்கிந்தியத்தீவுகள் - தென்னாபிரிக்காவையும் வெற்றிகொண்டன.

டாக்காவில் நடந்த இலங்கை-இந்திய போட்டியில் முன்னதாக நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்தியா துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி ஆடத்தொடங்கிய இந்திய அணி 39 ஓட்டங்களுக்குள் 3 விக்கெட்டுக்களை இழந்து இக்கட்டான நிலையில் இருந்தது.

ஒரு முனையில் விக்கெட்டுக்கள் விழுந்தாலும் மறுமுனையில் ஆரம்பத்துடுப்பாட்ட வீரரான தவான் நிலையாக நின்று விளையாடினார். தவானுடன் 3 ஆவது விககெட்டுக்காக இணைந்த ரைனா ஜோடி மிகச் சிறப்பாக விளையாடி ஓட்டங்களைக் குவித்தது.

ரைனா 54 ஓட்டங்களை எடுத்த நிலையில் ஆட்டமிழந்தபோது கார்த்திக் வந்தார். இவரும் தவானும் சிறப்பாக விளையாடியபோது தவான் ஆட்டமிழந்தார். இவர் 136 பந்துகளில் 19 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக 146 ஓட்டங்களைப் பெற்றார்.

கார்த்திக் 39 பந்துகளில் 6 பவுண்டரிகள், 4 சிக்ஸர்கள் அடங்கலாக 70 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் குவித்தார். இறுதியில் இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 316 ஓட்டங்களைப் பெற்றது.

பந்துவீச்சில் சானகா 3, ம.்.ரூப் 1 விக்கெட்டை கைப்பற்றினர். 317 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில் ஆடத்தொடங்கிய இலங்கை நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 260 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது. இதனால், இந்திய அணி 56 ஓட்டங்களால் வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தெரிவானது.

இலங்கை அணி சார்பில் தரங்கா 61, விதான 37, டி சில்வா 26, ரட்னாயக்கா, சுறாஜ் இருவரும் 24 ஜே.சில்வா ஆட்டமிழக்காமல் 28 நவீலா 20 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் சிங், ரைனா இருவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் குப்தா 3 விக்கெட்டுக்களையும் ராயுடு 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். இந்தப் போட்டியின் ஆட்டநாயகனாக தவான் தெரிவானார்.

டாக்காவில் நடந்த தென்னாபிரிக்க - மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கிடையிலான மற்றொரு போட்டியில் மேற்கிந்தியத்தீவுகள் 34 ஓட்டங்களால் தென்னாபிரிக்காவை வென்றது.

முன்னதாக நாணயச் சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்கா, மேற்கிந்தியத்தீவுகள் அணியை துடுப்பெடுத்தாடப் பணித்தது. இதன்படி முதலில் ஆடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி, நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 284 ஓட்டங்களைப் பெற்றது.

இந்த அணிசார்பாக ஆரம்பத் துடுப்பாட்டவீரர் மார்ஷல் 106, மறாஜ் 34, சைமன்ஸ் 30 ஒகஸ்டன் 33, கான் ஆட்டமிழக்காமல் 26 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் மார்வி 2, செப்ரம்பர் 1 விக்கெட்டையும் கைப்பற்றினர். மேற்கிந்தியத்தீவுகள் அணியில் 3 பேர் ரன்அவுட்டானதும் குறிப்பிடத்தக்கது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் அனைத்து விக்கெட்டையும் இழந்து 250 ஓட்டங்களை மட்டும் பெற்றதன் காரணமாக 34 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது.

இந்த அணிசார்பாக வான்ஜார்ஸ் வெல்ட் 40, போயர் 32, வான்வைக் 41, சில்வானா 42, பெனசா 27 ஓட்டங்களைக் கூடுதலாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் ராம்பவுல் 3, செபஸ்டியன் , பாஜ்ஜன் இருவரும் தலா 2 விக்கெட்டையும், பார்க்கர் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். இந்தப் போட்டியில் ஆட்டநாயகனாக மார்ஷல் தெரிவானார்.



## விளையாட்டு

# இந்தியா - பாகிஸ்தான் தொடரில் ஸ்ரீவ் பக்னர் நடுவராக நியமனம்



இந்திய - பாகிஸ்தான் தொடருக்கான நடுவர்களை சர்வதேச கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. அவுஸ்ரேலிய சுற்றுப் பயணத்தில் இந்திய வீரர்களுக்குப் பாதகமாக நடந்துகொண்ட மேற்கிந்தியாவைச் சேர்ந்த ஸ்ரீவ் பக்னர் நடுவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஏப்ரல் 5 தொடக்கம் 9 ஆம் திகதிவரை நடைபெறும் 2 ஆவது டெஸ்ட்டில் அவரும், சைமனும் நடுவராக உள்ளனர். முதல் டெஸ்ட்டுக்கு (மார்ச் 28 - ஏப்ரல் 1) டேவிட் ஷெப்பேர்ட், சைமன் ஆகியோரும் 3ஆவது டெஸ்ட்டுக்கு (ஏப்ரல் 13 - 17) டேவிட் ஷெப்பேர்ட், ரூபி கோயட்சனும் நடுவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

டேவிட் ஷெப்பேர்ட் ஒருநாள் போட்டியில் 3 ஆட்டத்துக்கும், சைமன் டப்பெல் 2 ஆட்டத்துக்கும் நடுவராக உள்ளனர். 5 ஒருநாள் ஆட்டத்தில் உள்ளூர் நடுவர்கள் பணியாற்றுவார்கள்.

# பாகிஸ்தானுடனான தொடரில் பார்த்தீவ் பட்டேலுக்கு வாய்ப்பு

## இந்திய அணித் தலைவர் கங்கூலி தெரிவிப்பு

இந்திய கிரிக்கெட் அணி பாகிஸ்தானுக்கு வருகிற 10 ஆம் திகதி புறப்பட்டுச் செல்கிறது. பாகிஸ்தான் பயணத்துக்கான இந்திய அணி வருகிற 3 ஆம் திகதி அறிவிக்கப்படுகிறது. இதன் ஒருநாள் தொடரில் விக்கெட் கீப்பர் பார்தீவ்பட்டேலுக்கு வாய்ப்புக் கொடுக்கப்படும் என்று கப்டன் கங்கூலி தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் கூறும்போது அவுஸ்ரேலிய பயணத்தில் பார்த்தீவ் பட்டேலுக்கு சரியான வாய்ப்புக் கொடுக்கப்படவில்லை. ஆனால், பாகிஸ்தான் தொடரில் முழு வாய்ப்புக்கொடுக்கப்படும். தேர்வுக் குழுவினர் அவருக்கு தொடர்ந்து வாய்ப்பளிப்பார்கள் என்று நம்புகிறேன். பாகிஸ்தான் பயணத்தில் பாதுகாப்பு தொடர்ந்தும் கவலையளிக்கும் வகையில் உள்ளது. அந் நாட்டு அரசு முழு உத்தரவாதம் கொடுத்துள்ளது என்றார்.

# இந்தியாவுக்கு எதிரான போட்டிகளில் ஆக்ரோஷமாக விளையாட வேண்டும்!

## மொயின்கான் தெரிவிப்பு

பாகிஸ்தான் அணியின் அனுபவம் வாய்ந்த விக்கெட் கீப்பர் மொயின்கான் சிறந்த துடுப்பாட்ட வீரர்களில் ஒருவராவர். இந்தியாவுக்கு எதிரான தொடரில் தேர்வு அணியில் இடம்பெற்றுள்ளார். பயிற்சியில் ஈடுபட்டு வரும் இவர் இந்தியாவுக்கு எதிரான தொடரில் பாகிஸ்தான் வீரர்கள் ஆக்ரோஷமாக விளையாடவேண்டும் என்று கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது.

இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையே நடக்கும் போட்டிகள் எப்போதுமே மிகவும் பரபரப்பாக இருக்கும். இரு அணியினரும் வெற்றி பெறவேண்டும். என்ற நெருக்கடியில் ஆடுவார்கள். தற்போது எங்கள் மண்ணில் நடைபெறும் தொடர் என்பதால் பாகிஸ்தான் அணிக்கு அதிக நெருக்கடி உள்ளது. உள்ளூர் ரசிகர்களை திருப்திப்படுத்த வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம்.

இந்திய அணியை தோற்கடிக்க பாகிஸ்தான் வீரர்கள் அனைவரும் ஆக்ரோஷமாக விளையாடவேண்டும் நியூஸிலாந்து சுற்றுப்பயணத்தின் போது சிறப்பாக விளையாடிய இளம் வீரர்களான இம்ரான் பர்கத், யாசின் ஹமித் இத்தொடரிலும் சிறப்பாக விளையாடுவார்கள்.

இந்திய அணியின் விக்கெட் கீப்பர் பார்த்தீவ் பட்டேல் திறமையானவர் அல்ல என்பது தவறானது. அவருக்கு இன்னும் அனுபவம் தேவை.



என்னால் இன்னும் 3 ஆண்டுகளுக்கு சர்வதேச போட்டியில் ஆட முடியும். 2007 ஆம் ஆண்டு உலகக் கோப்பை வரை விளையாட முடிவு செய்துள்ளேன். இவ்வாறு மொயின் கான் கூறினார்.

# இந்திய நாடாளுமன்ற தேர்தல் முடிவுகள் பாரதீய ஜனதாவுக்கு சாதகமாக இருக்கும்

## மத்திய உளவுப் பிரிவு தெரிவிப்பு

(புதுடெல்கி)

நாடாளுமன்றத் தேர்தல் முடிவு பாரதீய ஜனதாவுக்கு சாதகமாக இருக்குமென்று மத்திய உளவுப் பிரிவு கருத்துத் தெரிவித்துள்ளது.

நாடாளுமன்றத்துக்கு வருகிற ஏப்ரல், மே மாதங்களில் தேர்தல் நடைபெறவுள்ளது. இந்தத் தேர்தல் முடிவு எப்படியிருக்கும் என்பது குறித்து மத்திய அரசின் உளவுப்பிரிவு (ஐ.பி) ஆய்வு நடத்தியுள்ளது. உளவுப் பிரிவினர் இந்தியா முழுவதும் கடந்த நான்கு மாதங்களாக இந்த ஆய்வை மேற்கொண்டனர்.

ஆய்வுக்குப்பின்னர் உளவுப் பிரிவின் அறிக்கை மத்திய அரசிடம் தாக்கல் செய்யப்பட்டது. ஆய்வின் முடிவு வருமாறு,

நடைபெறவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலில் பாரதீய ஜனதா தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு மொத்தமுள்ள 543 இடங்களில் 275 முதல் 300 இடங்கள் வரை கிடைக்கும். காங்கிரஸ் கட்சிக்கு 115 இடங்கள் கிடைக்கும்.

"இந்தியா ஒளிர்கிறது" என்ற பெயரில் வாஜ்பாய் அரசின் சாதனைகளை விளக்கி செய்யப்படும் விளம்பரங்கள் தேசிய ஜனநாயக கூட்டணியின் வெற்றிக்கு பெரிதும் உதவியாக இருக்கும். "இந்தியா ஒளிர்கிறது' என்ற விளம்பரத்துக்கு எதிராக காங்கிரஸ் மேற்கொள்ளும் பிரசாரம் இதுவரை எடுபடவில்லை.

மேலும் தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு எதிராக ஒரு பொது அணியை உருவாக்க காங்கிரஸ் தவறிவிட்டதும் ஆளும் கூட்டணிக்கு ஒரு சாதகமான நிலைமை ஏற்படுத்தியுள்ளது.

உத்தரப்பிரதேசத்தில் காங்கிரஸ் தலைவர் சோனியா மற்றும் அவரது மகன் ராகுல், மகள் பிரியங்கா ஆகியோர் மேற்கொள்ளும் பிரசாரம் அங்கு காங்கிரஸ் கட்சியின் வெற்றி வாய்ப்பை அதிகரிக்க பெரிதும் உதவும் என்று கருத முடியாது. அங்கு பாரதீய ஜனதாவுக்கு 50 இடங்கள் வரை கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. பாரதீய ஜனதா தரப்பில் இருந்துவரும் வற்புறுத்தல்கள் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் காரணமாக காங்கிரசுடன் கூட்டணி அமைக்க பகுஜன் சமாஜ கட்சித் தலைவர் மாயாவதி தயக்கம் காட்டி வருகிறார். ஒருவேளை, அவர் காங்கிரசுடன் கூட்டணி அமைத்தாலும் அந்தக் கட்சிக்கு 20 இடங்களுக்கு மேல் ஒதுக்கமாட்டார்.

இதேபோல், பீகாரிலும் தனது கூட்டணிக்கட்சியான காங்கிரசுக்கு ராட்ஷ்ரீய ஜனதாதளத் தலைவர் லல்லுபிரசாத் 5 தொகுதிகளை ஒதுக்க விரும்பவில்லை. ஆந்திராவில் தேசிய ஜனநாயகக் கூட்டணியிலுள்ள தெலுங்கு தேசம் பலம் பெற்று விளங்குவதால் அங்கும் காங்கிரஸ் பெரும் சவாலைச் சந்திக்கவேண்டியுள்ளது.

மத்தியப் பிரதேச மாநிலத்தில் காங்கிரஸ் பெரும் தோல்வியை சந்திக்கும். கடந்த டிசம்பரில் அங்கு நடந்த சட்டசபைத்தேர்தலில் பாரதீய ஜனதாவுக்குக் கிடைத்த வெற்றி நாடாளுமன்றத் தேர்தலிலும் தொடரும். இதேபோல, குஜராத் மாநிலத்தில் முதலமைச்சர் நரேந்திர மோடியின் செல்வாக்கு பாரதீய ஜனதாவுக்கு வெற்றியைப் பெற்றுத் தரும். ராஜஸ்தான் மாநிலத்தில் காங்கிரஸ் 6 தொகுதிகள் வரை வெற்றிபெறக்கூடும் மேற்கண்ட விபரங்கள் ஆய்வில் தெரியவந்திருப்பதாக உளவுப் பிரிவின் உயர் அதிகாரி ஒருவர் தெரி வித்தார்.

ஆனால், உளவுப்பிரிவின் அந்த ஆய்வை காங்கிரஸ் பொருட்படுத்தவில்லை. வாஜ்பாய் அரசுக்கு ஆதரவான சூழ்நிலை நிலவி வருவதாக செய்யப்படும் பிரசாரத்தை மேலும் பரப்பும் முயற்சியாகத்தான் இந்த ஆய்வைக் கருதவேண்டுமென்று காங்கிரஸ் கட்சியின் செய்திப் பிரிவுச் செயலாளர் டாம் வடக்கன் கூறினார்.



# முட்டாள் தனமான நாய்

ஒரு மனிதன் நாய் ஒன்றை வளர்த்து வந்தான். அது மிகவும் போக்கிரி நாயாக இருந்தது. அந்த நாய் இருக்கும் தெருவில் தெரியாதவர்கள் எவராவது நடந்து சென்றால் உடனே குரைத்து, துரத்திச் சென்று கடித்துவிடும். நாயை வளர்த்தவரைத் தேடிவரும் புதிய நண்பர்களைக்கூட அது கடித்து வந்தது.



எனவே, அவன் தெருவில் செல்பவர்களை எச்சரிக்கை செய்ய எண்ணினான். ஆகவே, நாயைப் பிடித்து அதன் கழுத்தில் பித்தளை மணி ஒன்றைக் கட்டினான். நாய் எங்கு சென்றாலும் அந்த மணி அடிக்கும் சத்தம் கேட்கும். நாய் வருகிறது என்பதை எல்லோரும் அறிந்து கொள்வர். மணி அணிந்த நாய் என்று அந்த நாயைக் குறிப்பிட்டு ஊரார் பேசினர். 'மணி அணிந்த நாய் என ஊரார் குறிப்பிட்டுப் பேசுவதை அறிந்த நாய் - பெரிதும் மகிழ்ந்தது.

இவ்வாறு அவர்கள் பேசியது, அது தனக்குத்தரப்பட்ட கௌரவம் என்று நாய் கருதியது. அதனால், தன்னுடைய மணிகளைப் பலமாக அசைத்தபடி கழுத்தை ஆட்டியது. வீறுநடைபோட்டுத் தெருவைச் சுற்றிவந்தது.

தலைநிமிர்ந்து கம்பீரமாக நடந்துசெல்லும் அந்த நாயை, ஒரு கிழட்டு நாய் பார்த்தது. அதன் அகம்பாவத்தையும், ஆணவத்தையும் கண்டு அது பெரிதாகச் சிரித்தது. மணி அணிந்த நாய் - கிழட்டுநாயே! ஏன் என்னைப் பார்த்துச் சிரிக்கிறாய்? என்று அதட்டிக்கேட்டது. உடனே கிழட்டு நாய் சொன்னது 'உன் அறியாமையை எண்ணித்தான் நான் சிரித்தேன்' என்று கூறியது. 'நீ எவ்வளவு பெரிய முட்டாள்! மணி அணிந்திருப்பது உனக்குக் கிடைத்திருக்கக்கூடிய மிகப்பெரிய கௌரவம் என்று நீ கருதிவிட்டாய், அது உன்னை அவமானப்படுத்தவே இருக்கிறது என்பது உனக்குப் புரியவில்லை' என்று கிழட்டுநாய் சொல்லிற்று.

தனது முட்டாள்தனத்தை நினைத்து இப்போதுதான் மணி அணிந்த நாய் வெட்கப்பட்டது. 'என்னை வளர்ப்பவர் நான் எல்லோரையும் கடித்திருக்கிறேன் என்பதனை அறிந்தார். என்னை அடித்துத்திருத்துவதற்குப் பதிலாக நான் நல்லவனல்ல என்பதை நானே மணியடிக்கும்படி சத்தம் போடும்படி செய்துகாட்டி புலப்படுத்திவிட்டார். இனிமேல் நான் நல்லவனாக நடந்து, என்னைப் பலரும் பாராட்டும்படி நடப்பேன் என உறுதி கொண்டது.

## ஓவியப்போட்டி

சிறுவர்களே உங்கள் ஓவியங்களுக்கு பரிசுதர எண்ணியுள்ளோம். உங்கள் கைவண்ணங்களை இன்னும் மெருகூட்ட வரைந்து அனுப்புங்கள். இந்த ஓவியப்போட்டியில் பல விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. அதாவது, ஆண்டு 1-11 வரையான மாணவர்கள் இதில் பங்குபற்றலாம். நீங்கள் வரையும் ஓவியத்தில் நீர்வர்ணம், எண்ணெய் வர்ணம், கலர்ப்பென்சில் போன்றன பயன்படுத்தலாம்.

வெள்ளைத்தாளில் ஓவியத்தினை வரைந்து அனுப்பவும். அனுப்பும் ஓவியத்தின் தாளினை மடிக்காமல் அனுப்பவும். தட்டச்சுத்தாள் (A4) இல் அமையவேண்டும். நீங்கள் வரைந்த ஓவியங்களை கீழ்வரும் கூப்பனைப்பூர்த்தி செய்து, அதனுடன் இணைத்து அனுப்பிவையுங்கள். தேர்ந்தெடுக்கப்படும் ஓவியங்கள் 3 இற்கு பரிசுகள் வழங்கப்படும். அத்தோடு, 10 ஆறுதல் பரிசுகளும் உண்டு. நீங்கள் அனுப்பும் ஓவியங்கள் பரிசுக்குரிய ஓவியங்கள் - இவை நடாத்தப்படும் கண்காட்சியில் பார்வைக்காக வைக்கப்படும்.

முழுப் பெயர் :..............................

கற்கும் பாடசாலை :..............................

கற்கும் தரம் :..............................

வீட்டு முகவரி :..............................

.................. .................. ..................
அதிபர்/ஆசிரியர் ஒப்பம் திகதி மாணவர் ஒப்பம்

ஓவியப்போட்டி
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267,காவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## ஈழத்துத் தமிழறிஞர் ஒருவர்
# சுவாமி ஞானப்பிரகாசர்

குறிப்பு - 1 ஆரம்பம் 2. பிறப்பு கல்வி குருமடம் 3. சமயப்பணியும் சமூகப்பணியும் 4. தமிழ்த் தொண்டு 5. முடிவு

ஈழநாட்டில் பிறந்து தமிழ் வளம் பெறத்தொண்டாற்றிய அறிஞர்கள் பலராவர். அவர்கள் வரிசையில் சுவாமி ஞானப்பிரகாசர் - தமிழுக்கு ஆற்றிய தொண்டு ஏனைய அறிஞர்கள் செய்த தொண்டிலும் பார்க்கப் புதுமையானது.

சுவாமி ஞானப்பிரகாசர் - யாழ்ப்பாணத்து மானிப்பாயிலே 1875 ஆம் ஆண்டு சாமிநாதப்பிள்ளைக்கும், தங்கமுத்துவுக்கும் மகனாகப் பிறந்தார். அவருக்கு பெற்றோர் சூட்டிய பெயர் வைத்திலிங்கம். அவர் தமது ஆரம்பக் கல்வியை யாழ்ப்பாணத்திலுள்ள புனித பத்திரிசியார் கல்லூரியில் ஆங்கிலமொழிமூலம் பயின்றார். அவர் மாணவனாய் இருக்கும்போதே ஒழுக்கத்தையும், கல்வியையும் தம் இரு கண்களெனப் போற்றினார். தாய் மொழியாம் தமிழிலும், உலகப் பொது மொழியாம் ஆங்கிலத்திலும் புலமையடைந்து பல பரிசில்கள் பெற்றார் கல்லூரிப் படிப்பை முடித்த பின்னர். இலங்கை அரசாங்க புகையிரதப் பணியில் பணியாற்றினார். எனினும், அவர் மனம் அமைதி அடையவில்லை. தமிழ்ப் பற்றும் அவர் உள்ளத்தில் நிறைந்தன. அதனால், அரச சேவையை விட்டுவிட்டார். 1901 ஆம் ஆண்டு கத்தோலிக்க சமயத்தில் - வணக்கத்துக்குரிய பிதாவாக துறவற வாழ்க்கையை மேற்கொண்டார்.

இவர் கத்தோலிக்க மத வளர்ச்சிக்குப் பெருஞ்சேவை செய்தார். சமய வளர்ச்சிக்காக பற்பல நூல்களைத் தமிழிலும், ஆங்கிலத்திலும் எழுதி வெளியிட்டார். சமயம் சம்பந்தமான பல பாடல்களை இயற்றினார். சாதனையாலும், போதனையாலும் மக்கள் நல்லொழுக்கம் உள்ளவர்களாக வழிகாட்டினார். சமயப்பணியோடு சமூதாயத்துக்குச் சேவை செய்யவேண்டும் என்ற அவாவும் அவருக்கிருந்தது. முக்கியமாக ஏழை மக்களின் நலனுக்காகப் பாடுபட்டவர். வீடுகட்டி வாழ வழிகாட்டினார். ஏழைக் குழந்தைகள் கல்வி கற்பதற்காகப் பாடசாலைகள் அமைத்தார். சமயத்தொண்டு, சமூகசேவை என்னும் இவை சுவாமி ஞானப்பிரகாசருக்குப் புகழைப் பெற்றுத்தரவில்லை. அவரை இன்றும் என்றும் நினைவு கூர்வதற்குக் காரணம், அவர் ஆற்றிய உன்னதமான தமிழ்த் தொண்டேயாகும். அவர் துறவியாக இருந்த காலத்தில் வேற்றுமொழிகள் பலவற்றைக் கற்றார். அதனால் தமிழையும், வேற்றுமொழிகள் சிலவற்றையும் ஒப்பிட்டுப்பார்க்கும் ஆற்றல் அவருக்கு இருந்தது. அதனால் தமிழில் பல ஆய்வு நூல்களை எழுதி வெளியிட்டார். தமிழ் வரலாற்று ஆராய்ச்சி தமிழ் மொழியின் தொன்மையைப் புலப்படுத்துபவை தமிழின் பூர்வீக சரித்திரமும், சமயமும், யாழ்ப்பாண வரலாறு என்பன வரலாற்றுப் பாங்கானவை. இவை எல்லாவற்றிலும் பார்க்க சுவாமி ஞானப்பிரகாசருக்குப் பெரும் புகழ் ஈட்டித்தந்த நூல் தமிழ்ச்சொற் பிறப்பு, ஒப்பியல் அகராதி. இது தமிழ்ச் சொற்களின் பிறப்புப் பற்றிய ஆராய்ச்சிநூல். பிறமொழிச் சொற்களோடு தமிழுக்குள்ள தொடர்பையும் விளக்குவது. தமிழின் பழமையை எடுத்துக் காட்டுவது இவரது இம்முயற்சி ஏனைய தமிழறிஞர்கள் எவரும் செய்யாத ஓர் சாதனையாகும். அதனால், அவரது புகழ் இலங்கையில் மாத்திரமன்றி பிற பலநாடுகளிலும் பரவியிருந்தது. இவ்வாறு தமிழ் மொழிக்கு அரும்பெருஞ் சேவை செய்த சுவாமி ஞானப்பிரகாசர் 1947 ஆம் ஆண்டு அமரரானார்.

இலங்கை அரசு அவரது படம் பொறித்த முத்திரையை 1981 ஆம் ஆண்டு வெளியிட்டுக் கௌரவித்தது. இ.வித்தியா யாழ்.வடஇந்து மகளிர் கல்லூரி.

இங்கே மடிக்கவும்



## நாடுகளைத் தெரிந்துகொள்வோம்

# இந்தியா

| | | |
|---|---|---|
| நாடு | - | இந்தியக் குடியரசு. |
| மக்கள் தொகை | - | 100,000,000. |
| தலைநகரம் | - | புதுடெல்கி |
| மக்கள் | - | இந்து ஆரியர்கள், திராவிடர்கள். |
| மொழி | - | இந்தி |
| மதம் | - | இந்துக்கள், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள், சீக்கியர்கள், பௌத்தர்கள், ஜெயின்ஷ். |
| தொழில் | - | துணி உற்பத்தி, இரசாயனப் பொருள். |
| பணம் | - | இந்திய ரூபாய். |

இந்தியா ஒரு மிகப் பெரிய நாடு, இந்தியாவில் 18 அரச மொழிகள் காணப்படுகின்றன. 1600 மொழிகள் பேசப்பட்டு வருகின்றன. இந்த நாட்டின் நாகரிகம் கி.மு 200 இல் ஆரம்பித்ததாகச் சொல்லப்படுகின்றது. ஆரியர்கள் இந்த நாட்டை கி.மு 1500 காலப் பகுதிகளில் கைப்பற்றினர். இந்தக் காலத்தில் பல விதமான கடவுள் வழிபாடுகளும் ஆரம்பமானது. தீண்டாமை இந்த நாட்டில் பரவலாகக் காணப்படுகின்றது. கி.மு 500 இல் பௌத்தம் இந்த நாட்டில் பரவ ஆரம்பித்தது. சக்கரவர்த்தி அசோகாவின் காலப்பகுதியாகும். காலம் செல்லச் செல்லச் பௌத்தம் இந்த நாட்டில் செல்வாக்கு இழந்தது. 1192 இல் மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து வந்த முஸ்லிம்கள் குடியேற ஆரம்பித்தனர். போர்த்துக்கேயர்களும், பிரித்தானியர்களும் இந்த நாட்டில் ஆட்சி செலுத்தினர். இதே நேரத்தில் பிரெஞ்சு, டச்சுக்காரர்கள், பானிஷ்காரர்கள் வர்த்தக நிலையங்களை வைத்திருந்தனர். 1915 இல் தென்னாபிரிக்காவிலிருந்து, காந்தி நாட்டிற்குத் திரும்பினார். இந்தியாவின் முதலாவது பிரதமர் ஜவகர்லால் நேரு பின்னர் மகள், இந்திராகாந்தி, அடுத்து ராஜீவ் காந்தி ஆகியோர் ஆட்சிப் பொறுப்புக்களை வகுத்தனர்.




### தாஜ்மஹால்

இது ஷாஜஹானால் கட்டப்பட்டது. மனைவி மும்தாஜ் ஞாபகார்த்தமாக இதை மாபிள் கல்லால் கட்டியிருந்தார். இதை முடிப்பதற்கு ஆயிரத்திற்கும் மேற்பட்ட வேலையாட்களுக்கு 20 ஆண்டுகள் எடுத்தன. இந்தியாவின் புனித நதியான கங்கைக்கு அருகில் 'வாரணசி' அமைந்துள்ளது. இந்துக்கள் மோட்சத்துக்குச் செல்வதற்கு முன் இந்த இடத்தில் இருக்கவிரும்புவர்கள் என்று சொல்லப்படுகிறது. புத்தகாயா என்னும் இடத்தில் புத்தர் ஞானோதயம் பெற்றதாகச் சொல்லப்படுகிறது.

அஜந்தா - குகைச்சுவர் ஓவியத்துக்கு பெயர் பெற்றது.

## விடுகதையும் விடையும்

1) வெட்ட வெட்ட தழைக்கும் அது என்ன?
தலைமயிர்
2) சிவப்புப் பெட்டிக்குள் சில்லறைக் காசு அது என்ன?
செத்தல் மிளகாய்
3) உலகின் எல்லாவற்றிற்கும் இருப்பது அது என்ன?
பெயர்
4) முள்ளுக்குள்ளே முத்துக்குளியல் அது என்ன?
பலாப்பழம்
5) நெருப்பில் வெந்தவனுக்கு நீண்டநாள் ஆயுள் அவன் யார்?
இருப்பு

ம.பவித்ரன்
தரம் - 8, கொக்குவில் இந்துக்கல்லூரி



**சிந்தனைக்கு!**
"நடப்பதெல்லாம் நன்மைக்கு" என்ற மனப்பக்குவத்தை வளர்த்துக் கொண்டால், மனச்சோர்வுகள் நீங்கும்.

# சிறுவர் அரங்கம்

அன்புள்ள சிறுவர்களே!

நீங்கள் எழுதும் கட்டுரைகளும், கதைகளும், சுயசரிதைகளும் நன்றாக அமைகின்றன. இன்னும் சிறப்பாக அமைய நீங்கள் நிறைய ஆக்கங்களை எழுதுங்கள். எழுதும் போது தேர்ச்சி பெறக்கூடிய வாய்ப்பு ஏற்படுகின்றது. இன்று சிறுவர்கள் தான் கூடுதலான கூடிய அறிவு உள்ளவர்களென ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது. ஆகவே உங்களின் திறமைகளை பத்திரிகைமூலம் தான் வெளிக் காட்ட முடியும். உங்கள் ஆக்கங்கள் சிறப்பாக அமைந்த பின் கண்டிப்பாகப் பத்திரிகையில் பிரசுரமாகும். உங்கள் ஊர்களில் அன்றாடம் நடைபெறும் சம்பவங்களை வைத்து நிறைய எழுதமுடியும். எழுதுங்கள் கண்டதையும் எழுதுங்கள், எழுதியவற்றில் தரமான ஒன்றைத் தேர்ந்தெடுங்கள், பின்பு அனுப்பி வையுங்கள். வளரும் நீங்கள் கூடவே எழுத்துத் திறனிலும் வளரவேண்டும்.

## பொது அறிவு

1. லக்சபான மின்நிலையம் எத்தனையாம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.
1950.
2. தேசிய அடையாள அட்டை (NIC) வழங்கப்படும் முறை அறிமுகமான ஆண்டு?
1972.
3. உலகில் அதிக வானொலி நிலையங்களைக் கொண்டுள்ள நாடு எது?
ஐக்கிய அமெரிக்கா.
4. அஞ்சல் அட்டையை (POSTCARD) அறிமுகஞ்செய்து வைத்த நாடு எது?
அவுஸ்ரேலியா.
5. தேசிய தினம் ஜனவரி 01 ஆக உள்ள நாடுகள் எவை?
கியூபா, சூடான்.

**மு. தர்சினி - தரம் - 8**

---

1. கனடாவின் தேசியப் பறவை எது?
வாத்து.
2. அவுஸ்ரேலியாக் கண்டத்தை கண்டுபிடித்தவர் யார்?
கப்டன் குக்.
3. அமெரிக்க நாட்டின் தேசியக்கொடியில் எத்தனை நட்சத்திரம் உண்டு?
50 நட்சத்திரம்.
4. வட பகுதியில் உள்ள மிகப் பெரிய குளம் எது?
இரணைமடு.
5. அமெரிக்காவில் எத்தனை மாநிலங்கள் உண்டு?
50 மாநிலம்.

**ச. விஸ்வரூபன் தரம் - 8 யாழ்.மத்திய கல்லூரி**

# இளந்தேனீக்கள் கழகம் அங்கத்தவர்கள்



முழுப்பெயர் :- க.பிரியங்கா
கற்கும் பாடசாலை :-
சுண்டிக்குளி மகளிர் கல்லூரி
தரம் :- 4
ஆர்வமுள்ள துறைகள் :-
கதை வாசித்தல், வரைதல்.



முழுப்பெயர் :- க.கௌரி
கற்கும் பாடசாலை :-
பளை மத்திய கல்லூரி
தரம் :- 9
ஆர்வமுள்ள துறைகள் :-
முத்திரை சேகரித்தல்,
கட்டுரை, சிறுகதை.

முழுப்பெயர் :- வை.மிதுலன்
கற்கும் பாடசாலை :-
கிளி.மகா வித்தியாலயம்
தரம் :- 10
ஆர்வமுள்ள துறைகள் :-
வானொலி கேட்டல்,
விளையாட்டுத்துறை, கல்வித்துறை.

முழுப்பெயர் :- கீ.அச்சுதன்
கற்கும் பாடசாலை :-
டிறிபேக் கல்லூரி
தரம் :- 5
ஆர்வமுள்ள துறைகள் :-
கல்வித்துறை, கலைத்துறை, பத்திரிகை வாசித்தல்.

முழுப்பெயர் :- ர.றஜிந்தன்
கற்கும் பாடசாலை :-
பளை மத்திய கல்லூரி
தரம் :- 7
ஆர்வமுள்ள துறைகள் :-
பத்திரிகை வாசித்தல், கதை வாசித்தல்,
வானொலி கேட்டல்.

முழுப்பெயர் :- தி.சாரங்கன்
கற்கும் பாடசாலை :-
கொக்குவில் இந்துக் கல்லூரி
தரம் :- 8
ஆர்வமுள்ள துறைகள்:
பத்திரிகை, கட்டுரை வாசித்தல், ஆக்கம் எழுதுதல்.

முழுப்பெயர் :- சு.சுவேந்தன்
கற்கும் பாடசாலை :-
பளை மத்திய கல்லூரி
தரம் :- 7
ஆர்வமுள்ள துறைகள் :-
கிரிக்கெட், பத்திரிகை வாசித்தல், கட்டுரை எழுதுதல்.

முழுப்பெயர் :- வே.பார்த்தீபன்
கற்கும் பாடசாலை :-
பளை மத்திய கல்லூரி
தரம் :- 8
ஆர்வமுள்ள துறைகள் :-
சங்கீதம், கிரிக்கெட்,
வானொலிகேட்டல்.

முழுப்பெயர் :- உ.வதூஷன்
கற்கும் பாடசாலை :-
பாலர் பாடசாலை
தரம் :- பாலர் வகுப்பு
ஆர்வமுள்ள துறைகள் :-
தொலைக்காட்சி பார்த்தல், விளையாடுதல்.

## இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா?

அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந் தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.

இளந்தேனீக்கள் கழகம் உங்களின் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது.

நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.

கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந்தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும். விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:-

இளந்தேனீக்கள் கழகம்
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267,நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## இளந்தேனீக்கள் கழகம்

### விண்ணப்பம்

முழுப் பெயர் :..............................
கற்கும் பாடசாலை :..............................
கற்கும் தரம் :..............................
வீட்டு முகவரி :..............................
பிறந்த திகதி :..............................
ஆர்வமுள்ள துறைகள் :..............................
..............................

.................. திகதி .................. ஒப்பம்

.................. அதிபர்/ஆசிரியர் ஒப்பம் .................. பெற்றோர் ஒப்பம்

இங்கே மடிக்கவும்



# உங்கள் கைவண்ணம்



மு.மிரோசன்
தரம் - 9
கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.



இ.கௌரிநிஷா
தரம் - 10

## பழமொழிகள்

1) கடவுளை நம்பினோர் கைவிடப்படார்.
2) மனமுண்டால் இடமுண்டு.
3) அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு.
4) அடிமேல் அடியடித்தால் அம்மியும் நகரும்.
5) இளங்கன்று பயமறியாது.
6) இளமையிற் கல்வி சிலையில் எழுத்து.
7) இரக்கப்போனாலும் சிறக்கப்போ.
8) அவனின்றி அணுவும் அசையாது.
9) அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி.
10) இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை.
11) ஆனைக்கும் அடிசறுக்கும்.
12) ஆத்திரக்காரனுக்குப் புத்தி மத்திமம்.
13) அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.
14) பாத்திரம் அறிந்து பிச்சைகொடு.
15) ஆழம் அறியாமல் காலை விடாதே.
16) உப்பிட்டவரை உள்ளளவும் நினை.
17) அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு.
18) காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்.
19) பேராசை பெரு நட்டம்.
20) குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்.

- நஜிந்தன் -

# எனது கிராமம்

கற்பக்குளை உடுவில், சுன்னாகம் எனது கிராமம். இங்கு அழகான குளங்களும், வயல்வெளிகளும் பல உண்டு. பச்சைப் பசேல் என்று காட்சி அளிக்கும் மென்பச்சை கம்பளி விரித்ததுபோல் காட்சி தரும் வயல்களும் உண்டு.

அத்துடன், மூன்று பாடசாலைகளும் எல்லாக் கடவுள்களுக்கு கோயில்களும் உண்டு. இங்கு அழகிய சிறுவர் பூங்காவனங்களும் உண்டு. இங்கு எந்த நேரமும் மெல்லிய தென்றல் வீசிக்கொண்டே இருக்கும். இங்கு தபாலகம் உண்டு. அத்தோடு இந்த கிராமத்திற்கு விசேடமாகவும் பெருமை தருவதுமான கற்பெக்குளை சித்தி விநாயகர் அமைந்துள்ளது.

இந்த ஊருக்கு கற்பக்குளை எனப் பெயர் வரக்காரணம் ~ விநாயகர் பெருமான் ஒரு கிணறு வெட்டும்போது, அதில் இருந்து தோன்றினார். அதனால் அவருக்குக் கற்பக்குளை சித்தி விநாயகர் என்று பெயர் உண்டாயிற்று.

எனது உயிர் உள்ளவரை எனது கிராமத்தைப் போற்றுவேன்.

சோதிலிங்கம் நிசாந்
தரம் - 9
இளவாலை புனித கென்றியரசர் கல்லூரி.

# விஞ்ஞான விளக்கம்

✵ கறவைப் பசுக்களுக்கு மற்றைய பசுக்களைவிட கூடுதலான அளவு தவிடு பிண்ணாக்கு வடிக்கப்படுகிறது.

தவிடு, பிண்ணாக்கு புரதம் நிறைந்த உண வாகும். கறவைப் பசுக்களுக்குப் புரத உணவு அவசியமாகும்.

✵ வெங்காயம் நறுக்கும்போது கண்ணில் தானாக நீர் சொரிகிறது.

வெங்காயம் நறுக்கும்போது வெளிப்படும் சுலபமாக ஆவியாகக்கூடிய இரசாயனப் பொருள் கண்களை தாக்குவதால் கண்ணீர் உண்டாகிறது.

✵ அப்பிள் வெட்டும்போது பழுப்பு நிறம் உருவாகிறது

அப்பிளில் - மேலனின் எனும் இரசாயனப் பொருள் உண்டு. இது இரும்பு ஒட்சிசனுடன் தாக்கம் நிகழ்த்துவதானல் பழுப்பு நிறம் காணப்படுகிறது.

✵ மனிதன் கோபப்படும்போது, கண் ஏன் சிவப்பாகிறது.

கோபத்தால் கண் மட்டுமல்ல, கன்னங்கள், காதுகூட சிவப்பாகும். அதிரினலின் சுரக்கும் அதிரினலின் ஓமோன் களினால் திடீரென்று ஏற்படும் அதிக இரத்த ஓட்டம் இதற்கு காரணம்.

✵ மெல்லியவர்களைவிட உடல் பருத்தவர் நீந்துவது சுலபம்

ஒரே நிறையை உடைய மெல்லியவர் பருத்தவர் இருவரினால் இடம் பெயர்க்கப்படும் நீரின் நிறை அதிகம் எனவே மெல்லியவரைவிட பருத்த வருக்குக்கூடிய மேலுதைப்பு ஏற்படுவதால், பருத்தவர் நீந்துவது சுலபம்.

✵ இரவில் பூக்கும் பூக்கள் வெள்ளை நிறமாக உள்ளது.

இரவில் பூக்கும் பூக்களின் மகரந்தசேர்வை நிகழ்வதற்கு பூச்சிகள் அவற்றை நாடிவரவேண்டும். இரவில் வெள்ளை நிறம் தெளிவாகதெரியும். ஆகையால் பூக்கள் வெள்ளை நிறமாக காணப்படும்.

✵ ஆண்களுக்கு மட்டும் மீசை முளைக்கிறது.

மீசை முளைப்பது ஆண்களில் சுரக்கப்படும் அந்திரோஜன் எனும் ஓமோன்னால் நிகழ்வது.

*தி.சாரங்கன் கொக்குவில் இந்துக் கல்லூரி.*

# உங்களுக்குத் தெரியுமா?

- இலங்கையின் கூடுதலான மாவட்டங்கள் கொண்ட மாகாணம் எது? வடமாகாணம்.
- இலங்கையில் நிலப்பரப்பில் கூடிய மாவட்டம் எது? அநுராதபுரம். கி.மீ 7180.
- இலங்கையில் நிலப்பரப்பில் கூடிய மாகாணம் எது? வடமத்திய மாகாணம். கி.மீ 10472.
- இலங்கையில் நிலப்பரப்பு குறைந்த மாவட்டம் எது? கொழும்பு - கி.மீ 700.

க.யசிந்தன்
சென்.ஜோன்ஸ் கல்லூரி

# My self

My name is Asokamala
My Father name Sriskantharaja
My mother name is Vijayaluxsumi
I have four brother's and three sister's
My Class teacher name is K.vanitha
I like subject are English. Tamil and music
My Hobbies are Singing and reading story book
My friends are kirisna,komala and Rajitha
My School name is J/uduppiddy Girl's college
My pet is Dog,Cat,cow,and hen.
Thank you.

*S.Asokamala*
*J/uduppiddy Girl's college*

# சமுர்த்தி வங்கிப் பணியாளர்களுக்கான பயிற்சிநெறி மார்ச் 1 ஆம் திகதி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

சமுர்த்தி வங்கிச் சங்கங்களில் கடன் வழங்கல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு, சமுர்த்தி வங்கிப் பணியாளர் தொகுதியினருக்கான பயிற்சிநெறி - எதிர்வரும் பங்குனி மாதம் முதலாம் திகதி தொடக்கம் 4 ஆம் திகதிவரை காலை 9 மணி முதல் பி.ப 5 மணி வரை யாழ்.மாவட்டச் செயலக கேட்போர்கூடத்தில் நடைபெறவுள்ளது.

முதற்கட்டமாக பங்குனி 1 ஆம், 2 ஆம் திகதிகளில் நல்லூர், சாவகச்சேரி, காரைநகர், உடுவில், தெல்லிப்பளை, ஊர்காவற்துறை, சண்டிலிப்பாய் ஆகிய பிரதேச செயலகங்களுக்கும், இரண்டாம் கட்டமாக பங்குனி 3 ஆம், 4 ஆம் திகதிகளில் வேலணை, கரவெட்டி, கோப்பாய், யாழ்ப்பாணம், நெடுந்தீவு, சங்கானை, பருத்தித்துறை, மருதங்கேணி ஆகிய பிரதேச செயலகங்களுக்கும் பயிற்சி வகுப்புக்கள் நடைபெறும்.

இந்தப் பயிற்சி நெறியில்- வங்கி முகாமையாளர், வங்கியில் பணியாற்றும் 5 சமுர்த்தி உத்தியோகத்தர்கள், தலைமையக முகாமையாளர் மற்றும் அவருடன் இணைந்து பணியாற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், வங்கி பரிசீலனை நடவடிக்கைக்காக குறித்தொதுக்கப்பட்ட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், கணக்காளர், பிரதேச செயலாளர் ஆகியோரை பிரதேச செயலகப் பிரிவுகளிலிருந்து கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

இந்தப் பயிற்சிநெறி நடைபெறும் திகதிகளில் வங்கியை மூடவேண்டிய அவசியம் ஏற்படுமாயின், மூடவேண்டிய திகதிகளைக் குறிப்பிட்டு, வங்கி மூடப்பட்டிருக்கும் என்ற அறிவித்தலை வாடிக்கையாளர் காணக்கூடிய வகையில் தெரியப்படுத்துமாறும், வங்கி நிதி நடவடிக்கைப் பிரிவு பணிப்பாளர் கேட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (44,113)



யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டபோது - ஆசிரிய சங்கச் செயலாளர் துணைவேந்தரிடம் மகஜர் கையளிக்கிறார்.

# சரியான முடிவைத் தமிழ் மக்கள் தேர்தலில் வெளிப்படுத்தவேண்டும்

## வன்னி தேர்தல் வேட்பாளர்

தமிழீழத் தேசியத் தலைவர் இந்த முறை தேர்தலில் நாட்டம் கொண்டுள்ளதால், ஏதோ ஒன்று இருக்கிறது என்பதை தமிழர்கள் புரிந்துகொள்ளவேண்டும் என்று முல்லைத்தீவு மாவட்டம் சார்பாக போட்டியிடும் வேட்பாளரான சதாசிவம் கனகரட்னம் தெரிவித்தார்.

வன்னித் தொகுதி வேட்பாளர் அறிமுக நிகழ்வில் உரையாற்றிய அவர் இதைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது-

கடந்த 20 வருடங்களாக தேர்தல் என்றால் என்ன என்று தெரியாத பிரதேசத்தில் இருந்து நான் வந்துள்ளேன். எமது தேசியத் தலைவர் பிரபாகரன் தேர்தலே வேண்டாம் என்று இருந்தவர். இந்த முறை தேர்தலில் நாட்டம் கொண்டுள்ளார் என்றால், ஏதோ ஒன்று இருக்கிறது என்பதனை அனைவரும் புரிந்துக்கொள்வதோடு சரியான முடிவு ஒன்று எடுப்பது முக்கியமானதொன்று என்பதை நான் கூறிக் கொள்கிறேன் என்றார்.

# மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க பொது அமைப்புகள் முன்வரவேண்டும்

## நல்லூர் கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் ஈஸ்வரன்

(அரியாலை)

மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை அந்தப் பகுதியில் உள்ள பொது அமைப்புக்கள் தீர்க்க முன்வரவேண்டும். இதுவே அவர்களின் கடமைகளில் ஒன்றாகும்.

இவ்வாறு நல்லூர் கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் பொ.ஈஸ்வரன் கடந்த ஞாயியன்று அரி யாலை கிராமசேவகர் பிரிவுகளுக் குட்பட்ட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலில் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது -

மக்கள் மத்தியில் ஏற்படுகின்ற பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காக, பொலிஸ் நிலையங்களையோ, நீதிமன்றங்களையோ நாடிச்செல்வதை விட, அந்தப் பகுதிகளில் காணப்படும பொது அமைப்புக்கள் தீர்க்க முயல்வது சாலப்பொருத்தமாகும். அத்துடன், யாழ்ப்பாணத்தில் சமூகச் சீர்கேடுகளும் அதிகரித்துக் காணப்படுவது வேதனையை அளிக்கிறது.

எனவே, இவற்றைத் தவிர்க்க வேண்டுமாயின் இளைஞர்கள், யுவதிகளின் தீய சிந்தனைகளை விலக்கி, அவர்கள் மத்தியில் நல்ல எண்ணங்கள் ஏற்படுத்துவதற்காக அவ்வப்போது கலை நிகழ்வுகளைப் பொது இடங்களில் நடத்தவேண்டும்.

இவற்றின் மூலம் இளைஞர், யுவதிகளின் தீய சிந்தனைகளைத் திசை திருப்பிவிடலாம். இதற்காக பொது அமைப்புக்கள் உழைக்கவேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமுக நிலையத்தில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் ஆலயங்கள், சனசமுக நிலையங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள், பாலர் பாடசாலை ஆசிரியைகள் மற்றும் இளைஞர், யுவதிகளும் கலந்துகொண்டனர். (55)

# உலருணவுப்பொருட்கள் வழங்கப்படவுள்ளன

(நவிண்டில்)

2003 ஆம் ஆண்டுக்கான உலக உணவுத்திட்டத்தின் கீழ் கரவெட்டி பிரதேசசபை விசேட ஆணையாளர் சிதம்பரப்பிள்ளை பசுபதியின் மேற்பார்வையில் பூர்த்திசெய்யப்பட்ட 18 வேலைத்திட்டங்களுக்கான உலர் உணவுப்பொருட்கள் வழங்கப்படவுள்ளன.

இந்த உலர் உணவுப் பொருட்கள் கட்டைவேலி - நெல்லியடி சங்கத்தின் கீழுள்ள சாமியன் அரசடி 5 ஆம் இலக்கக் கிளையில் இன்று காலைமுதல் வழங்குவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதென விசேட ஆணையாளர் அறிவித்துள்ளார். (116)

# முறைசாரா தொழிற் பயிற்சி மார்ச் 1 இல் நேர்முகத்தேர்வு

முறைசாராக் கல்வி தொழிற்திறன் பயிற்சிநெறி நேர்முகப் பரீட்சைகள் நடைபெறவுள்ளன.

யாழ்.வலயக்கல்வி அலுவலகத்தினால் முறைசாரக்கல்வி தொழிற்திறன் பயிற்சி நேர்முகப் பரீட்சைகள் எதிர்வரும் - மார்ச் மாதம் முதலாம் திகதி காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நேர்முகப் பரீட்சைக்கு சமூகமளிப்பவர்கள் தேசிய அடையாள அட்டை, கல்வித்தகமை சான்றிதழ், பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் ஆகியவற்றைத் தவறாது கொண்டுவரவேண்டும் என வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (தீ)

# மீளக்குடியமரும் முஸ்லிம்களுக்கு வீடமைத்துக் கொடுக்கத் திட்டம்!

## மக்கள் தொடர்பகச் செயலாளர்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் மீளக்குடியமரும் முஸ்லிம்களுக்கு வீடமைத்துக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக, யாழ்ப்பாணத்தில் மீளக்குடியமரும் முஸ்லிம் மக்களின் நலன்களைக் கவனித்து வரும் மக்கள் தொடர்பகச் செயலாளர் தெரிவித்தார்.

முஸ்லிம் குடியிருப்புக்கள் யாவும் சிதைவுற்றிருக்கின்ற நிலையில் அவற்றை மீளக்கட்டியெழுப்பும் பணியில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியும், தமிழ்-முஸ்லிம்கள் நலன்பேணும் அமைப்புக்களும் பல முயற்சிகளை எடுத்துவருகின்றன.

இதன் அடிப்படையில், யாழ்ப்பாணத்திலிருந்து புலம்பெயர்ந்து சென்று அகதிகளாக அவலப்பட்டுக் கொண்டிருக்கும் முஸ்லிம் மக்களை மீளக்குடியமர்த்துவதற்கான முயற்சிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்திலுள்ள முஸ்லிம் மக்களுக்குச் சொந்தமான வீடுகளைத் திருத்தவும், முற்றாகச் சேதமடைந்த வீடுகளை மீளமைக்கவும் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இதனடிப்படையிலேயே, இன்று முதல் இந்தப் புனரமைப்புப் பணிகளை ஆரம்பித்துள்ளோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ப)

# திருட்டுக் குற்றவாளிக்கு 6 வருடங்களின் பின் தண்டனை

1997 ஆம் ஆண்டு வீடொன்றில் 63 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான பணம், நகை முதலியவற்றைக் கொள்ளையிட்ட நபருக்கு, நேற்றுமுன்தினம் யாழ்.மாவட்ட நீதிமன்றில் ஒருவருட கடூழியச் சிறைத்தண்டனை வழங்கப்பட்டது. இராசவீதி - நவக்கிரியிலுள்ள வீடொன்றினுள் புகுந்து, வீட்டிலுள்ளவர்களை கத்தி முனையில் பயமுறுத்தி, ஐயாயிரம் ரூபா பணம் மற்றும் 58 ஆயிரத்து 500 ரூபா நகை முதலியவற்றைக் கொள்ளையிட்டிருந்தார்.

இவர் மீதான வழக்கு கடந்த .6 வருடங்களாக இடம்பெற்றுவந்த போதிலும், நேற்றுமுன்தினமே சந்தேகநபரான புன்னாலைக்கட்டுவன் ஈவினையைச் சேர்ந்த வைத்தி பத்மநாதன் என்பவர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து, யாழ். மாவட்ட நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா குற்றவாளிக்கு ஒருவருட கடூழியச் சிறைத்தண்டனை வழங்கினார். (ப)



பண்டத்தரிப்பு - பிரான்பற்று சமுர்த்தி வங்கிச் சங்கத் திறப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட சண்டிலிப்பாய் பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் பவநீதன் மங்கள விளக்கேற்றுகிறார். (91)

# இலவச கண் பரிசோதனை முகாம்

தீவக லயன்ஸ் கழகத்தினரின் ஆதரவுடன் இலவச கண் பரிசோதனை முகாம், நாளை வேலணை மேற்கு நடராசா வித்தியாலயத்தில் காலை ஏழு மணிமுதல் இடம்பெறவுள்ளது. கண் விழிவெண்படல பரிசோதனையும் - ஆலோசனையும் என்ற விடயத்தில் கண் சத்திர சிகிச்சை நிபுணர் எஸ்.குகதாசன் சிகிச்சையினை வழங்கவுள்ளார்.

எனவே - வேலணை, மண்கும்பான், அல்லைப்பிட்டி, சரவணை, நாரநதனை, ஊர்காவற்துறை, சுருவில் மக்களை இந்தப் பரிசோதனை முகாமில் கலந்து பயன்பெறுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர்.

# மாட்டுத்தொழுவம் விஷமிகளால் தீவைப்பு

புன்னாலைக்கட்டுவன் தெற்குப் பகுதியில் இரண்டு வாழைத் தோட்டங்களில் வைக்கப்பட்டிருந்த மாட்டுத் தொழுவங்கள் மதுபோதையில் வந்த விஷமிகளால் ஒரே இரவில் தீயிட்டு எரிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில், இரண்டு மாட்டுத் தொழுவங்கள் முழுமையாக எரிந்து சாம்பராகியதுடன், அங்கு கட்டப்பட்டிருந்த மாடுகளும் எரிகாயங்களுக்கு உள்ளாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்தச் சம்பவம் தொடர்பாக, பாதிக்கப்பட்டவர் சுன்னாகம் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார். (83)


வாழ்க வளமுடன்

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில்



பெயர் : ம.கீர்த்திகன்
முகவரி : அரசடி வீதி, வடலியடைப்பு.

இரண்டாவது அகவையில்



பெயர் : ற.கிருஷானி
முகவரி : கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

ஆறாவது அகவையில்




பெயர் : ஸ்.பிஜஸ்
முகவரி : 10 ஆம் வட்டாரம், நெடுந்தீவு.

வாரநோக்கு

யாழவன்

# பழைய வீடும் பதிய பூட்டும் பலப்பரீட்சை முடிவு என்னவாகும் .....?




தேர்தல் திருவிழா தொடங்கி விட்டது. அதற்கான ஏற்பாடுகளில் கட்சிகளும், அவற்றின் ஆதரவாளர்களும் குதித்துள்ளனர். இந்தத் தேர்தல் திருவிழாவிலே பெட்டிக்கடை அமைப்பதற்கென பலர் வருவார்கள். கடையைப் பரப்பி வியாபாரம் முடித்து, இலாபம் பெற்றவுடன் அவர்கள் மூட்டையைக் கட்டிவிடுவார்கள். இந்த முறை ஈ.பி.டி.பியினர் பெட்டிக்கடை வியாபாரத்திலேயே இறங்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

முதற்கட்டமாக தீவுப்பகுதிகளுக்கு சென்ற முன்னாள் எம்.பி. மதனராஜா தலைமையிலான குழுவினர் - பொது அமைப்புக்கள் பலவற்றையும் சந்தித்து, வாக்குப் பிச்சையெடுக்க ஆரம்பித்துள்ளனர். அவர்களது வேண்டுதல்கள் பெரும்பாலும் நிராகரிக்கப்படக்கூடிய வாய்ப்புக்களேயுள்ளன.

ஈ.பி.டி.பியினர் தற்போதுள்ள இரு ஆசனங்ளும் இந்தத் தேர்த

வீடும், புதிய பூட்டும் களத்திலே உள்ளன. வீடு - வயதுவந்த வாக்காளர்கள் பலருக்கு ஏற்கனவே பழக்கமான ஒரு சின்னம்.

ஆனால், பூட்டுப் புதியது. பூட்டுக்கு மக்கள் வாக்களிக்க வேண்டுமாக இருந்தால், அதிகளவான பிரசாரங்கள் மூலம் மக்கள் மத்திக்கு பூட்டு எடுத்துச்செல்லப்பட வேண்டும். ஆனந்தசங்கரி தற்போதுள்ள சூழ்நிலையைப் பொறுத்தவரையிலே அது சாத்தியப்படக் கூடியதொன்றல்ல. எனவே, இந்தப் பூட்டு - சங்கரிக்கு வாய்ப்பூட்டு போட்டாலும் அதிசயமில்லை.

ஆனாலும், வலுவானதொரு நம்பிக்கையிலேயே சங்கரி களத்திலே குதித்திருக்கிறார். அனுபவம் வாய்ந்ததொரு அரசியல்வாதியான அவர் - மக்கள் தன்னை நிராகரிப்பதன் மூலம் அரசியலிலிருந்து ஒதுங்கிக்கொள்ள ஒருபோதும் துணியமாட்டார். தனது சுயேட்சைக்குழுவிற்கு ஒரு ஆசனமாவது கிடைக்கும். அது தனக்குரியதுதான் எனத் திட்டமிட்டிருக்கும் சங்கரி - தனது குழுவில் வேட்பாளர்களாக நிறுத்தியிருப்பவர்கள் கிராம, பிரதேச மட்டங்களிலே முதன்மையானவர்கள் ஆவர்.

ஆனால், தமிழினமே ஒன்று சேர்ந்து ஜனநாயக ரீதியிலே

**உதயசூரியன் சின்னத்திற்கே வாக்களித்து வந்த தமிழ் மக்களுள் பெரும்பாலானோர் இம்முறை வேறு சின்னங்களுக்கு வாக்களிக்கவேண்டியநிலை ஏற்பட்டுள்ளது.**

**வாக்குச் சீட்டிலிருந்து உதய சூரியன் மறைந்துவிட்டது. பழைய வீடும், புதிய பூட்டும் களத்திலே உள்ளன.**

வர்கள்.

எனவே, இவர்களை விடுவிப்பது வாக்குவங்கியிலே பெரிய வீழ்ச்சியை ஏற்படுத்திவிடும். இதனாலேயே இருவரும் இறுதி நேரத்திலே சேர்க்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், ஈழவேந்தன் கனகலிங்கம் ஆகியோர் விடுதலைப் புலிகளுடைய நெருங்கிய ஆதரவாளர்களாக இருந்தபோதும், மக்கள் மத்தியிலே அறிமுகம் குறைந்தவர் ஈழவேந்தனோ. தனது அரசியல் வாழ்நாளை அதிககாலம் இந்தியாவிலே செலவிட்டார். இதனால், இளம்வாக்காளர்கள் பலருக்கு அவரைத் தெரியாது.

இந்தியாவினால் நாடு கடத்தப்பட்ட இவர் - கடந்த சில வருடங்களாகவே யாழ்ப்பாண அரசியலில் ஈடுபட்டு வருவதால், இளைய தலைமுறையினர் அவரை முழுமையாக அறிந்திருக்க நியாயமில்லை. இதனால், வாக்களிக்கும்போது சில முரண்பாடுகள் தோன்ற வாய்ப்புண்டு. சங்கரியுடன் கூட்டுச் சேர்ந்திருக்கும் பலரது எம்.பிக் கனவு

யாருமேயில்லையெனவும் மனவேதனைப்பட்டுக் கொண்டார்.

அதற்குப்பின், கொழுமபு மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் பட்டியலிலே அவருக்கு இடம் கிடைத்தது. தமிழ் மக்களுடைய ஒற்றுமையை, உலகிற்குக் காட்டாமலே அரசியலிலிருந்து விலகிக்கொண்டதாகக் காட்டிக்கொள்ளும் மகேஸ்வரன் - தமிழ் மக்களுக்கு எதிராக முன்னர் செயற்பட்டு வந்த ஐக்கிய தேசியக் கட்சியிலேயே போட்டியிடுகிறார்.

இதுதானா தமிழ் மக்களுக்கு அவரால் கிடைத்த இலாபம். நாம் முன்னர் குறிப்பிட்டதுபோல, மகேஸ்வரன் ஆரசியலிலிருந்து ஒதுங்கிக் கொள்ள விரும்பமாட்டார்.

கொழும்பு தமிழரை நம்பி இறங்கும் மகேஸ்வரன் - கோட்டை விடுவாரா அல்லது கதிரையைப் பிடிப்பாரா என்பது தற்போது எதிர்வு கூற முடியாததொன்றாகும்.

இந்தமுறை தேர்தலிலே இருநூற்று இருபத்தைந்து நாடாளுமன்ற ஆசனங்களிலே தேசியப் பட்டியல் உறுப்பினர்கள் இருபத்தாறு பேர் தவிர்ந்த, நூற்றுத் தொந்றூற்று ஆறு பேரையும் மக்களின் வாக்கு மூலம் தெரிவு செய்வதற்காக, இருபத்துநான்கு அரசியற்கட்சிகளும், இருநூறு சுயேச்சைக் குழுக்களும் களத்திலே குதித்துள்ளன.

# பூட்டைக் கொண்டு வீட்டைப் பூட்ட முயலுகிறார் ஆனந்தசங்கரி!

கடந்த தேர்தலுக்கு முன்னர் அதாவது, 2000 ஆம் ஆண்டுத் தேர்தலின்போது, ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் - லண்டன் பி.பி.ஸியின் தமிழோசைக்கு அளித்த பேட்டியொன்றிலே, தமிழர் விடுதலைக் கூட்டணியினரை பெட்டிக்கடைக் காரர் என நக்கலடித்திருந்தார்.

1996 ஆம் ஆண்டு தீவுப்பகுதியில் மட்டும் நடாத்தப்பட்ட பொதுத் தேர்தலில் மோசடி வாக்குகள் உள்ளடங்கலாக 10000 வாக்குகளை மட்டும் பெற்று, ஈ.பி.டி.பி உறுப்பினர்கள் ஒன்பது பேர் யாழ். மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டிருந்தனர். இது இலங்கையின் அரசியல் வரலாற்றிலே ஒரு குறிப்பிடத்தக்க விடயமாகும். அதாவது, மாவட்டம் ஒன்றைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுமே ஒரு கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தார்கள் என்பதேயாகும்.

இதற்கடுத்து, 2000 ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தல் - குடாநாடு தழுவியரீதியிலே நடைபெற்றபோது டக்ளஸ் தேவானந்தா - பெட்டிக் கடைக்காரர் என வர்ணித்த கட்சிகளினால், அவரது அரசியல் வியாபாரம் பாதிக்கப்பட்டது. அவரது கட்சியினர் ஓடியோடி கள்ள வாக்குகளைப்போட்டும், நான்கு ஆசனங்களை மட்டுமே கைப்பற்ற முடிந்தது. 'பெட்டிக்கடைக்காரர்' அதிக இலாபம் பெற்றுக்கொண்டனர்.

இப்பொழுது மீண்டும் தேர்தல் வந்திருக்கிறது. ஆனால், நிலைமைகள் தலைகீழாக மாறிவிட்டன. இப்போது பெட்டிக்கடைக்காரராக டக்ளஸ் தேவானந்தா குழுவினர் கடை விரித்துள்ளார்கள்.

கடந்த பொதுத் தேர்தலோடு தனது அமைச்சர் பதவியையும் பறிகொடுத்ததோடு, இரு ஆசனங்களை மட்டுமே கைப்பற்றிக்கொண்ட டக்ளஸ் தேவானந்தா - யாழ்ப்பாணத்தைவிட்டு வெளியேறியிருந்தார்.

கிட்டத்தட்ட 3 வருடங்களாக குடாநாட்டிலிருந்து காணாமற்போயிருந்த அவரது குழுவினர் - தற்போது தேர்தல் வந்துள்ளமையால், யாழ்ப்பாண மண்ணில் மீண்டும் தமது கால்களை மிதித்துள்ளனர். மிதித்தவர்கள் - பெட்டிக்கடைகளைப் பரப்பவும் தொடங்கிவிட்டனர். கட்சி அலுவலகங்களுக்கு முன்னால் பச்சை, சிவப்பு வர்ணக் கொடிகள் பறக்கின்றன.

தேர்தல் பதாதைகள் கட்டப்பட்டுள்ளன. 'உங்கள் தேவையே எங்கள் இலட்சியமென' பிரசாரப் பணிகளின் ஆரம்ப கட்டமாக முன்னெடுக்கப்பட்டுள்ளன.

தீவக மக்களால் அங்கிருந்து அகற்றப்பட்ட ஈ.பி.டி.பியினர் - மீண்டும் அங்கு தமது நடமாட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

லில் குறைவதற்கோ அல்லது இல்லாமல் போவதற்கோ அதிக வாய்ப்புக்கள் உள்ளதாக கருத்துக் கணிப்புக்கள் கூறுகின்றன.

ஏனெனில், தமிழ்மக்கள் தமது ஒற்றுமையை வெளிப்படுத்த, தமிழத் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களிக்கத் தயாராகிவிட்டார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத்தான் இம்முறை ஆட்சியைத் தீர்மானிக்கும் சக்தியாக விளங்கப்போகிறது என ஆருடம் கூறப்பட்டுள்ளன.

225 நாடாளுமன்ற உறுப்பினர்களிலே எந்தவொரு சிங்களக் கட்சியும் அறுதிப் பெரும்பான்மைப் பலத்தைப் பெறமுடியாதுள்ளது எனக் கருத்துக் கணிப்புக்கள் தெரிவிக்கின்றன.

எனவே, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினது வலுவே, இம்முறை அரசியல் அரங்கிலே ஒலிக்கப்போகிறது என ரொய்ட்டர் செய்தி நிறுவனம்கூட கருத்து வெளியிட்டுள்ளது. அதற்காக தமிழ்மக்களுடைய நூற்றுக்கு நூறுவீதமான வாக்குகளும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்குத்தான் கிடைக்கும் என்று கூறிவிட முடியாது.

ஏனெனில், தமிழ்க் கட்சிகள் சிதறுண்டு, தனித்தனிக் கட்சிகளாகவும், சுயேட்சைக் குழுக்களாகவும் போட்டியில் இறங்கியுள்ளன. இவற்றுக்கெல்லாம் ஒரு கணிசமானளவு வாக்குகள் உண்டு. அதை யாரும் மறுக்கமுடியாது.

சுயேட்சையாகப் போட்டியிடும் ஆனந்தசங்கரி - மிகுந்த நம்பிக்கையுடன் களமிறங்கியுள்ளார். பூட்டை தேர்தல் சின்னமாகக்கொண்ட அவர்- அதனை வைத்து, கூட்டமைப்பினரின் சின்னமான வீட்டைப்பூட்டிவிட நினைக்கின்றார். ஆனால், அந்தப் புதுப்பூட்டு எவ்வளவுதூரம் வலுவானது என்பது தற்போது எதிர்வுகூற முடியாத நிலையில் உள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற பெயரிலே, அரசியற்கட்சி ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து நடைபெற்றுவந்த தேர்தல்களில் எல்லாம், உதயசூரியன் சின்னத்திற்கே வாக்களித்து வந்த தமிழ் மக்களுள் பெரும்பாலானோர் இம்முறை வேறு சின்னங்களுக்கு வாக்களிக்கவேண்டியநிலை ஏற்பட்டுள்ளது.

வாக்குச் சீட்டிலிருந்து உதய சூரியன் மறைந்துவிட்டது. பழைய

தனது உரிமையை, தனது அபிலாஷையை, பலத்தை வெளிக்கொணரமுயலும் இந்தச் சந்தர்ப்பத்திலே சங்கரியின் சுயேட்சைக் குழு பலரையும் சங்கடத்திற்குள்ளாக்கியுள்ளது.

தமிழர்களுடைய வாக்குகள் சிதறுண்டு தமிழ்த் தேசிய - தமிழ் மக்களின் ஒன்றுபட்ட சக்தியின் பலம் குறைந்துபோகக்கூடும் எனவும் அஞ்சப்படுகிறது.

இதனாலேயே பொது அமைப்புக்கள் பலவும் அரசியலிலிருந்து தயவு செய்து ஒதுங்கிக்கொள்ளுமாறு ஆனந்தசங்கரிக்கு ஆலோசனையும், வேண்டுதலும் கொடுத்தன.

அவரையடுத்து ஈ.பி.டி. பியும் தன் பங்குக்கு மக்களைப் பிரிக்க வரிந்து கட்டிக்கொண்டு களத்தில் இறங்கியுள்ளது. இந்த விடயத்திலே வாக்காளர்கள் அனைவரும் அவதானமாக இருக்கவேண்டும்.

இந்த நிலையில் இராணுவ கட்டுப்பாடற்ற பகுதியிலுள்ள வாக்காளர்களில் வாக்களிக்கும் உரிமை பாதிக்கப்படுமாகவிருந்தால், அது நிச்சயமாக கூட்டமைப்பினுடைய வாக்குப் பலத்திலே பெரியதொரு மாற்றத்தை ஏற்படுத்தும்.

இதனாலேயே, தமிழீழ அரசியற் துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் வன்னிப் பிரதேசமக்களின் வாக்களிக்கும் உரிமை மறுக்கப்பட்டால், பாரிய விளைவுகளைச் சந்திக்க வேண்டியேற்படும் என எச்சரிக்கை செய்துள்ளார். நிலைமை என்னவாகுமோ பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

கூட்டமைப்பினுடைய வேட்பாளர் பட்டியல் முன்னர் அறிவிக்கப்பட்டதிலிருந்து சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ள வேட்பாளர் பட்டியலில் புதிதாக சிவமகாராசா, சி.வி.கே. சிவஞானம், ஈழவேந்தன் ஆகியோர் தேசியப் பட்டியலிலே இணைக்கப்பட்டுள்ளனர். இந்தச் சிறு மாற்றம் கூட கூட்டமைப்பினுடைய வாக்கு வங்கியிலே பெரியதொரு மாற்றத்தைக் கொண்டுவரும்.

சிவமகாராசா, சிவஞானம் ஆகியோர் கூட்டுறவுத்துறை உட்பட, ஏனைய துறைகள் பலவற்றாலும் மக்கள் மத்தியிலே பிரபல்யம் பெற்றவர்கள். கடந்த தேர்தலின் போது இவர்கள் பல்லாயிரக்கணக்கான விருப்பு வாக்குளைப் பெற்ற

நிறைவேறாமலேயே போகப் போகிறது. இவர்களுள் ஒருவரான முத்துலிங்கம் கடந்த தேர்தலிலே தேசியப் பட்டியலிலே இடம்பெற்றிருந்தார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியில் தலைவர் சி.சிதம்பரம் காலமானதும், அவரது நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கு முத்துலிங்கத்தையே நியமிக்க வேண்டுமென சங்கரி சங்காரம் போடத் தொடங்கினார்.

அன்று ஆரம்பித்த போர் - இன்று சந்தி சிரிக்கும் வரை வளர்ந்து விட்டது. அரவிந்தனின் எம்.பி கனவும் இந்த நூற்றாண்டிலே நிறைவேற வாய்ப்பில்லை.

முத்துலிங்கம் - சங்கரியுடன் தேர்தலில் குதித்திருப்பது குறித்து அவரது ஆதரவாளர்கள் மத்தியிலே அதிருப்தி நிலவுவதாகவும், இதனால் அவருக்கு மிரட்டல்கள் விடப்பட்டு வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சில சந்தர்ப்பங்களில் இறுதி வேளையில் முத்துலிங்கம் மட்டுமல்லாது, சங்கரியும் தேர்தலை விட்டு ஒதுங்கிப் போனாலும் போகக் கூடும். இதனைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

மகேஸ்வரனைப்போல சங்கரியும் கௌரவத்தனமாகக் குடாநாட்டுத் தேர்தல் களத்தை மட்டுமல்ல, தமிழ்ப் பிரதேசங்களின் தேர்தல் களங்கள் அனைத்தையுமே விட்டு வெளியேறியிருக்கலாம். ஆனால், அவரது மனம் அதற்கு இடங்கொடுக்கவில்லை.

மகேஸ்வரனும் ஏதோ பெரிய தியாகத்தைச் செய்துவிட்டது போலப் பேசி வருகிறார். ஆனால், குடாநாட்டு அரசியலை விட்டுவிலகி, அவர் கொழும்பு மாவட்ட அரசியலிலே போட்டியிடப் பட்டபாடு பலருக்குத் தெரியாமலிருக்கும்.

குடாநாட்டு அரசியலுக்கு முழுக்குப் போட்டுவிட்டு, கொழும்பு சென்ற மகேஸ்வரன் இலவுகாக்க வேண்டியிருந்தது. அவருக்கு ஐக்கிய தேசியக் கட்சியால் எதுவித அழைப்பும் விடுக்கப்படவில்லை.

இறுதியிலே தனியார் தொலைக் காட்சியொன்றுக்கு அளித்திருந்த பேட்டியிலே - தான் ஓர் அரசியல் அநாதை, அரசியல் அகதி எனவும், தனக்குக் கைகொடுக்க

ஏறக்குறைய ஆறாயிரத்திற்கும் அதிகமான வேட்பாளர்கள் நிறுத்தப்பட்டுள்ளனர். இவர்களுள் அநேகமானோர் தமது வாக்காவது கிடைக்கும் என்ற நம்பிக்கையுடனேயே களம் இறங்குகின்றனர்.

களைகட்டும் தேர்தல் திருவிழாக் கூத்துக்கள் முடிவிற்கு வர இன்னும் ஒரு மாதத்திற்கு மேலாகவுள்ளது. கட்சிகளில் பிரசாரப்பகுதிகள் இன்னும் பெரியளவிலே குடாநட்டிலே ஆரம்பிக்கப்படவில்லை. ஆனால், பிரசாரப் பணிகளுக்கு பிள்ளையார்சுழி போடப்பட்டுவிட்டது.

கூட்டமைப்பினரும் தமது வீட்டைக் காவிக்கொண்டு மக்களிடம் செல்கிறார்கள். தமிழரசுக் கட்சி வளர்த்த வீதிகளோ, இன்று பற்றை மண்டியுள்ளன.

இந்தவீடுகளை மீட்கவே - இந்த வீட்டுச் சின்னத்தில் போட்டி. இதனாலேயே எமது நிலம் எமக்கு வேண்டும் எனும் கோஷத்துடன் தேர்தலல் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

தேர்தல் வன்முறைகள் பரவலாக இடம்பெற்றுவரும் சூழ்நிலையிலும், யாழ்ப்பாணத்தில் இன்னும் எதுவும் நடைபெறவில்லை.

அவ்வாறான தேர்தல் வன்முறைகள் எதுவும் நடைபெற்றால், அவற்றை கட்டுப்படுத்துவதிலே சிக்கல்கள் தோன்றும். விடுதலைப் புலிகள் ஒருபுறமும், இலங்கைப் பொலிஸார் ஒருபுறமும் வன்செயல்களைக் கட்டுப்படுத்த முனைவர். இது ஒரு இக்கட்டான சூழ்நிலையை தோற்றுவிக்கும்.

வன்முறைகளற்ற தேர்தல் ஒன்றை எதிர்கொள்வதே யாழ்ப்பாண மக்கள் பலரதும் விருப்பமாகும். அவர்களது விருப்பம் நிறைவேறாமல் போய்விடலாம்.

ஏனெனில், ஈபிடிபியினரும், அவர்களுக்கு மிகவும் விரோதமான புலிகளும் நேருக்கு நேர் சந்தித்துக்கொள்ளவுள்ளன. இது மிக இக்கட்டான சூழ்நிலை

வன்முறை வருமா? வாக்குச் சாவடிகள் நிறையுமா? என்பதெல்லாம் பெறுத்திருந்து பார்க்க வேண்டியவை.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு

குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு.

திருக்குறள்

# நமது நோக்கு

## தேர்தல்; இருவேறு முகங்கள்

இலங்கையின் இரு பிரதான சிங்களக் கட்சிகளான ஐக்கிய தேசிய முன்னணியும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியும் நேற்று முன்தினம் சம்பிரதாய பூர்வமாக - அதாவது பௌத்த சிங்கள பேரினவாதிகளை திருப்திப்படுத்தும் வகையிலான மதரீதியிலான வைபவங்களுடன் தமது தேர்தல் பிரசாரங்களை ஆரம்பித்துள்ளன.

ஐக்கிய தேசிய முன்னணியானது ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் தமது தேர்தல் பிரசாரத்தை ஆரம்பிக்கும் முன்னர், கண்டியிலுள்ள அஸ்கிரிய மற்றும் மல்வத்தை பீடாதிபதிகளின் ஆசீர்வாதங்களை பெற்றுக்கொண்டு, மதரீதியிலான வழிபாடுகளில் கலந்துகொண்டுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பௌத்த சங்கத்தினரின் ஆசியும், அனுசரணையும் யாருக்கு வெளிப்படையாக கிடைக்கிறதோ, அவர்களே சிங்கள இனத்தின் வாக்குகளை பெறுவார்கள் என்ற நம்பிக்கை சிங்கள அரசியல்வாதிகளிடம் பாரம்பரியமாக இருந்துவரும் ஒன்றாகும்.

அந்த வகையில் ரணில் விக்கிரமசிங்க தனது கட்சியின் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கான தெய்வஆசியை வேண்டி மல்வத்தை அஸ்கிரிய பீடாதிபதிகளை நாடியது ஒன்றும் வியப்பல்ல.

இம்முறை தேர்தல் பிரசாரத்தில் அவரும் அவரது கட்சியினரும் வழமைபோன்று இலங்கையின் இறைமை, ஒருமை மற்றும் ஒற்றையாட்சியின் மீதான பற்றுதலை உறுதிசெய்வதுடன், சமாதானம் குறித்தும் பேசவே செய்வார். தன் ஈராண்டு ஆட்சிக் கால அமைதிநிலை தொடர, தன்னை மீண்டும் ஆட்சியில் அமர்த்துமாறு கோருவார். தனது சமாதானம் மீதான பற்றால் நாட்டின் பொருளாதாரம் முன்னேற்றம் கண்டுள்ளதை புள்ளி விபரங்களுடன் கூறுவார். ஜனாதிபதியே சமாதான முயற்சிகளை குழப்பி தனது ஆட்சியைக்கலைத்து, நாட்டில் குழப்பம் ஏற்படுத்தினார் என்பார்.

ஏதோ சமாதானமும் அமைதியும் தன்னால்தான் வந்தது என்றும், 'வங்குரோத்து' நிலையில் இருந்த திறைசேரி தன் ஆட்சிக்காலத்தில்தான் நிறைவதற்கான வழி ஏற்பட்டதாகக் கூறுவார்.

ஆட்சி மாறினால் சமாதானம் உடையும் என்றும், தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காணாவிட்டாலும், சமாதானத்தை இழுத்தடித்து சர்வதேசத்தின் ஆதரவையும் அளவற்ற கடனையும் பெற்று, நாட்டின் பொருளாதாரக் கூனலை நிமிர்த்திவிடலாம் என்ற தனது தந்திரோபாய வியூகத்தைப் பயன்படுத்தி மக்களின் ஆதரவைக்கோரும் நோக்குடன், சந்திரிகாவினால் நாட்டை அதளபாதாளத்திற்கு இட்டுச் செல்லமுடியும் என்றும், அச்சுறுத்தும் வகையிலான தனது மென்போக்குத் தந்திரபேச்சுக்களால் மக்களின் மனங்களை வெல்ல நினைப்பார்.

அடுத்ததாக சந்திரிகா தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினர் பௌத்த சிங்கள கலாசாரத்தின் மற்றொரு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த மையமான அநுராதபுரம மகாபோதிக்குக்குச் சென்று, அங்கு பூஜைகளில் கலந்துகொண்டு அங்குள்ள பிரதம தேரோக்களிடம் ஆசீர்வாதம் பெற்று, அங்கு சத்தியப் பிரமாணமும் எடுத்துக்கொண்ட பின்னர், தமது முதலாவது தேர்தல் பிரசாரக் கூட்டத்தை பழம்பெரும் சிங்கள ராஜதானியான அநுராதபுரத்திலேயே நடத்தியுள்ளனர்.

இம்முறையும், சந்திரிகா தான் மட்டுமே இலங்கையின் இறைமையையும், ஒருமைப்பாட்டையும் சிதைக்காது சமாதானத்தை ஏற்படுத்தவல்ல ஒரே தேசியவாதியாகவும், சமாதானத் தேவதையாகவும் தன்னை மீண்டும் இனம்காட்டியபடி தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடுவார். ரணில் புலிகளுக்கு தமிழீழத்தை கொடுக்கும் நேரத்தில் தடுத்துவிட்டதாக மார்தட்டுவார்.

புலிகளிடம் திருகோணமலை பறிபோவதை தடுத்து காப்பாற்றிவிட்டதாக கர்ஜிப்பார்.

பண்டா பரம்பரையின் இனவாத மிடுக்குக் குறையாமல் தனது அதிகாரபலம் தேர்தலில் தனது கட்சி தோற்றாலும், தன்னிடம் முழுமையாக இன்னும் இரண்டு வருடங்களுக்கு இருக்கவே போகிறது என்ற அகங்காரத்துடன் பிரசாரத்தை மேற்கொள்வார்.

இவைதான் தென்பகுதி அரசியல் மேடைகளில் தேர்தல் பிரசாரகாலத்தில் அரங்கேறப்போகும் பிரதான கட்சிகளின் நிகழ்வுகளாகும்.

இதற்கு வேறுபட்டதும், பதவியைப்பிடித்தல், அதிகாரக் கதிரைகளை கைப்பற்றுதல் என்ற இலக்குகளில் இருந்து மாறுபட்ட இலட்சிய நோக்குடன் மண்ணினதும், மக்களினதும் விடுதலை என்ற நாடாளுமன்றத்தால் அடையமுடியாத குறிக்கோளுக்கான தமிழ்மக்களின் ஏகோபித்த - ஆதரவுக் குரலை உலகிற்கு எடுத்துரைக்கும் விதத்திலான தேர்தல் வடக்கிலும் - கிழக்கிலும் நடக்கப்போகிறது.

இங்கு தேர்தலில் நிற்கும் வேட்பாளர்கள் மதப்பீடங்களின் ஆசியை வேண்டியோ, ஆதரவை வேண்டியோ எங்கும் செல்லவில்லை. மாவீரர் துயிலுமில்லங்களுக்கு சென்று பிரதிக்ஞை எடுத்துக் கொண்டார்கள் அவ்வளவுதான்.

இவர்கள் வாக்குறுதிகளை அள்ளிவழங்கி பிரசாரம் செய்யப்போவதில்லை, மக்கள் இவர்களிடம் கேட்கும் வாக்குறுதி ஒன்றே ஒன்றுதான், எங்கள் மண்ணை, எங்கள் உரிமையை, எங்களின் இயல்பு வாழ்வை சுதந்திர மூச்சுடன் வாழ மீட்டுத்தாருங்கள் என்பது மட்டுமே அதுவாகும். இது தமிழர்களுக்காக, தமிழ் மண்ணுக்காக தம்மை அர்ப்பணித்து நின்று களமாடி தலைநிமிர வைத்த தலைமையின் பின்னால் தமிழினம் அணிதிரண்டு நிற்கிறது என்பதை சர்வதேசத்திற்கு உறைக்க உணர்த்தும் வகையில் நடைபெறும் தேர்தல் மட்டுமே என்பதை தமிழினம் உணர்வுபூர்வமாக மெய்சிலிர்க்க உணர்ந்து செயற்படவேண்டியது அவர்களின் வரலாற்றுக் கடமையாகும்.

## நாடும் நடப்பும்




# பொலிஸ் மா அதிபரின் கடமையில் ஜனாதிபதி தலையிட முடியாது

### ரஞ்சித் அபயசூரிய தெரிவிப்பு

(கொழும்பு)

பொலிஸ்மா அதிபரின் கடமைகளில் ஜனாதிபதி கூட தலையிட முடியாது என, சுயாதீன பொலிஸ் ஆணையாளர் ரஞ்சித் அபயசூரிய தெரிவித்தார்.

அண்மையில் கூட்டு வர்த்தக சம்மேளன உறுப்பினர்களைச் சந்தித்தபோதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பொலிஸ்மா அதிபரின்கீழ் அனைத்து பதவியுயர்வுகள், பதவிவிலகல்கள் மற்றும் இடமாற்றங்கள் என்பவற்றைக் கையாளும் முழுப்பொறுப்புக்களையும் சுயாதீன பொலிஸ் ஆணைக்குழு மேற்கொண்டது.

எதிர்வரும் பொதுத் தேர்தல் நீதியானதாகவும், வன்முறைகளற்ற நிலையிலும் இடம்பெறவேண்டும் என, வர்த்தக சம்மேளனங்களின் உறுப்பினர்கள் சுயாதீன பொலிஸ் ஆணையாளரிடம் வலியுறுத்தியுள்ளனர்.

வர்த்தக சம்மேளனங்களுக்கு சுயாதீன பொலிஸ் ஆணையாளர் பதிலளிக்கும்போது-

'பொலிஸாரின் கடமைகள் தொடர்பாக பொலிஸ்மா அதிபர் பரிந்துரைகளைச் செய்யமுடியும். எனினும், இவை தொடர்பில் பொலிஸ் ஆணையகமே இறுதி முடிவை எடுக்கும் உரிமையைக் கொண்டிருப்பதாகத் தெரிவித்தார்.

தேர்தல் கூட்டமைப்பின்போது பொலிஸார் நியாயமற்ற ரீதியில் செயற்பட்டார்கள் என, தேர்தல் ஆணையாளர் முறைப்பாடு செய்தால் அது தொடர்பாக கடுமையான ஒழுங்கு கற்ற நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ரஞ்சித் அபயசூரிய தெரிவித்தார்.

தேர்தல் காலத்தில் பொலிஸ் ஆணையாளருக்கு தமது ஒத்துழைப்பை வழங்குவதாக கூட்டு வர்த்தக சம்மேளன உறுப்பினர்கள் இந்தச் சந்திப்பின்போது உறுதியளித்தனர்.

இதேவேளை, கூட்டு வர்த்தக சம்மேளனத்தினர் விரைவில் தேர்தல் ஆணையாளரையும் சந்திக்க திட்டமிட்டுள்ளனர். (01)

# அமைச்சர் திஸநாயக்க மீது குற்றச்சாட்டு; உயர் நீதிமன்ற நீதியரசர்கள் விளக்கம்!

(கொழும்பு)

அமைச்சர் எஸ்.பி திஸநாயக்க உயர்நீதிமன்றத்திற்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில் கருத்து தெரிவித்ததாக கூறப்படும் குற்றச்சாட்டு தொடர்பாக உயர் நீதிமன்ற நீதியரசர்கள் விரைவில் தமது விளக்கங்களை வழங்கவுள்ளனர்.

இவர்களால் வழங்கப்படவுள்ள இந்த விளக்கம், தலைமை நீதியரசர் சரத் என்.சில்வாவிடம் சமர்ப்பிக்கப்படும்.

கடந்த நவம்பர்மாதம் மூன்றாம் திகதி ஹபராதுவ பகுதியில் வைத்து, எஸ்.பி திஸநாயக்க கூறிய கருத்துக்கள், உயர் நீதிமன்றத்தை அவமதிப்பதாக உணவட்டுவன பிரதேச வாசிகள் மூவர் உயர்நீதிமன்றில் மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தனர்.

இந்த இடத்தில் அமைச்சர் தெரிவித்த கருத்துக்கள் தொடர்பான ஒலி, ஒளி நாடாக்களை நீதிபதிகள் நேற்று முன்தினம் பார்வையிட்டனர்.

இந்தநிலையில் ஒலி, ஒளி நாடாவில் அமைச்சரால் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் தொடர்பாக அமைச்சர் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்வதா? அல்லது அமைச்சரை விளக்கமளிக்க நீதிமன்றுக்கு அழைப்பதா? என்பது குறித்து நீதிபதிகள் தலைமை நீதிபதியிடம் தமது கருத்துக்களை ஒருவாரத்திற்குள் தெரிவிக்கவுள்ளனர். (01)

### அபிவிருத்தி லொத்தர் சபையை

# ஜனாதிபதி சந்திரிகா பொறுப்பேற்பு ஐ.தே. கட்சி பலத்த கண்டனம்!

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா அபிவிருத்தி லொத்தர் சபையை பொறுப்பேற்றதை ஐக்கியதேசியக் கட்சி தனது பலத்த கண்டனத்தைத் தெரிவித்துள்ளது.

ஜே.வி.பியினர் கோருகின்ற கோரிக்கைகளை நிறைவேற்றும் வகையில் ஜனாதிபதி செயற்படுகின்றார் என்றும், அந்தக் கட்சி குற்றம்சாட்டியுள்ளது.

இதுவரை காலமும் எந்தவித பிழையையும் கண்டு பிடிக்காத ஜனாதிபதி, தேர்தல் காலத்தில் இவ்வாறு செயற்படுவது, அவர் தேர்தலில் வெற்றிகொள்வதற்காக இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுவருகிறார் என்று, ஐக்கிய தேசியக் கட்சியின் மத்தியசெயற்குழு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தை அரசாங்கம் தனியார் மயப்படுத்துவற்கு நடவடிக்கையில் ஈடுபட்டுவரும் வேளை, ஜனாதிபதி அதில்கூட தலையிட்டு வருகின்றார். இவ்வாறெல்லாம் ஜனாதிபதித் தேர்தலை கருத்திற்கொண்டே அவர் செயற்பட்டுவருகின்றார் என்று ஐக்கிய தேசியக் கட்சி மேலும் தெரிவித்துள்ளது. (01)

# திலங்க சுமதிபாலவின் பிணை மனு நிராகரிப்பு

சிறிலங்கா ரெலிக்கொம் தலைவர் திலங்க சுமதிபால கோரிய பிணைமனுவை மேன்முறையீட்டு நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

திலங்க சுமதிபால சமர்ப்பித்த பிணைமனு, நேற்று முன்தினம் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதிபதி - சந்திரதா நாணயக்கார விசேட மனுவின் அடிப்படையில் திலங்க சுமதிபாலவுக்கு பிணை வழங்கமுடியாது எனத் தெரிவித்தார். திலங்க சுமதிபாலவுக்கு பிணை வழங்கப்பட்டால், அது முன்பிருந்த குடிவரவு குடியகல்வு சட்டமீறல் குற்றச்சாட்டுக்களில் உள்ளாகியுள்ள பல கைதிகளுக்கு நீதியை மறுக்கும் செயலாக அமைந்துவிடும்.

அத்துடன், சுமதிபால பல்வேறு சந்தர்ப்பங்களில் நீதிமன்றக் கட்டளைகளை மதிக்காமல் நடந்து கொண்டமையால் நீதிபதிகள் பிரச்சினைகளுக்கு உள்ளானதையும் நீதிபதிகள் சுட்டிக்காட்டினர். (01)

# மகளிர் குழுக்களுக்கிடையே பட்டிமன்றப் போட்டி

எதிர்வரும் மார்ச் மாதம் 8ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ள சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு, யாழ்.மாவட்டத்தில் மகளிர் குழுக்களுக்கிடையிலான பட்டிமன்றப் போட்டி ஒன்று இடம்பெறவுள்ளது.

நான்குபேர் கொண்ட ஆறு குழுக்கள் இந்தப் போட்டியில் பங்குகொள்ளவுள்ளன. இந்தக் குழுக்களிடையேயான போட்டிகள் மார்ச் மாதத் தொடக்கத்தில் இடம்பெற்று, முதலிடத்தைப் பெறும் அணிக்கு பரிசில் வழங்கி கௌரவிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தப் போட்டியில் முதலிடம் பெறும் அணி, எதிர்வரும் மார்ச் 8 ஆம் திகதி மகளிர் தினத்தன்று மகரகமவில் உள்ள இளைஞர் சேவை மன்றத்தினால் தேசியமட்டத்தில் நடத்தப்படவுள்ள பட்டிமன்றப்போட்டியில் பங்குகொள்ள வாய்ப்பளிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அரசியல்நோக்கு

- கனகரவி -

**பொங்குதமிழில் தமிழினம் - தனது அரசியல் அபிலாஷை யினை வெளிப்படுத்த மக்களைத் திரட்டியது. பொங்குதமிழில் மக்கள் திரண்டுவந்து கேட்டதற்கு ஆதரவானதுதான். தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு என்பதைக்கூட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மக்களுக்குத் தெளிவுபடுத்துவதையும் தவறவிடக்கூடாது. இதன்மூலமும் நன்மையினையே கூட்டமைப்புப் பெறும். பொங்குதமிழுக்கு மக்கள் பொங்கிவந்து ஆதரவு தந்தார்கள். அதுபோலவே தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு ஆதரவு கிடைக்கவேண்டும்.**

# பொதுத் தேர்தல் 2004
# பிரித்தாள நினைப்பவர்களுக்கு பிடரியடி கொடுக்கும் வழி

கடந்த தேர்தலிலும் பார்க்க, இந்தத் தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு கூடுதலான வாக்குகளைப்பெற்று, கூடிய நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தமதாக்கிக்கொள்ள வாய்ப்புள்ளதாகவே தெரிகின்றது.

இந்த வாய்ப்பினைத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்கள் பயன்படுத்த முயற்சிக்கவேண்டும். அந்த முயற்சிகளில் ஒன்றாக- விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள வாக்காளர்களை பெரும்பான்மையாக வாக்களிக்க முன்வருவதற்கான தேவைகளைத் தெரியப்படுத்தி ஆர்வப்படுத்த வேண்டும்.

அது மட்டுமல்லாமல், கடந்த தேர்தலில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள வாககாளர்களை வாக்களிக்க இலங்கை அரசு தடுத்திருந்தது.

அரசு வாக்களிக்கும் மக்களின் உரிமையினைத் தடுத்ததை எதிர்த்து, பாதிக்கப்பட்டவர்கள் நீதிமன்றம் சென்றார்கள். அதன் பயன் மக்களை வாக்களிக்க விடாமல் தடுத்தது சட்டவிரோதமானது என்று தீர்ப்பு வழங்கப்பட்டது.

இப்படியான சட்டவிரோதசெயல் இந்த முறையும் நடப்பதற்கு அனுமதிக்கக்கூடாது. அதறகு எதனை உடனடியாகச் செய்யவேண்டுமோ,. அதனைச் செய்வதற்குத் தயாராக வேண்டும்.

வாக்குச்சாவடிகளுக்குப் பொலிஸார் பாதுகாப்பு வழங்குவது அத்தியாவசியமான ஒன்றல்ல. அரச அதிபர் தேர்தலை நடத்துவதற்குப் பொலிஸாரின் பாதுகாப்புத் தேவையில்லை எனக்கூறும் பட்சத்தில், அங்கு பொலஸாரின் பாதுகாப்புத் தேவையில்லைத்தான்.

இதனை ஏன் குறிப்பிடுகிறேன் என்றால், வாக்களிப்பு நிலையங்களை விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் வைப்பதற்குப் பொலிஸாரின் பாதுகாப்பு அவசியமென்று சிலர் கருதுகின்றனர் அது தவறானது.

தேர்தல் வன்முறைகளைத் தடுப்பதற்குத்தான் பொலிஸார் தேவைப்படுகின்றனர்.

தேர்தலை ஒழுங்காகவும், நேர்மையாகவும் நடத்துவதற்கு அதற்கான அதிகாரிகள் மட்டும் போதும். இதனை அந்தந்த மாவட்ட அரச அதிபர்கள், பொலிஸார் தேவையில்லை. நாம் ஒழுங்காகக் தேர்தலை நடத்துவோம். எனக் கூறினால் பொலிஸார் கடமைக்கு அமர்த்தப்படாமலும் தேர்தலை நடத்தலாம்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் வாக்களிப்பு நிலையங்களை வைப்பதால், சிலவேளை வேட்புமனுத்தாக்கல் செய்த ஏனைய கட்சிக்காரர்கள் தமது அவதானிப்பாளர்களை வாக்களிப்பு நிலையங்களில் கடமைக்கமர்த்துவதற்கு முடியாமல்போய் விடும் எனக் கருதலாம்.

அதுதொடர்பான எதிர்ப்பாளர்களுக்கு முன்கூட்டியே சொல்லக்கூடியது என்னவென்றால், எவருக்கும் தடுப்புப் போடவில்லையென்று அணமையில் தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் கூறினார். தவிரவும் வன்னித் தேர்தல் தொகுதியில், மணலாற்றில் திட்டமிட்ட குடியேற்றத்துள்ளும் வாக்களிப்பு நடைபெறுகின்றது.

இங்கு ஐ.தே.கட்சியைச் சேர்ந்தவரோ, பொதுஜன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்தவரோ தவிர வேறு எவராவது வாக்களிப்பு ஒழுங்காக நடைபெறுகின்றதா என அவதானிக்கின்றனரா? ஆகவே, வீண் தர்க்கங்களைத் தவிர்த்து, விடுதலைப் புலிகளின் கடடுப்பாட்டிலுள்ள வாக்காளர்களும் வாக்களிக்க ஒழுங்கு செய்யப்படவேண்டும்.

அது தேர்தலை தமிழர் தாயகத்திலும் நடத்தப்பட்டதை உலகிறகுச் சொல்லக்கூடியதெனினும், தமிழ்த் தேசயத்தின் எழுச்சிக்கு அடித்தளமிட்டுள்ளதற்கு அரசியல்ரீதியாக வலுச்சேர்க்கும் என நம்புவோம்.

தமிழரின் எதிர்கால அரசியல்ரீதியான நகர்விற்குத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வலுக்கொண்டதாக இருக்கவேண்டும். அதற்குத் தமிழர் தாயகப் பிரதேசத்தில் ஒட்டுமொத்தமாக தமிழ்மக்கள் தங்களின் அபிலாஷைகளை வெளிப்படுத்தவேண்டும். மக்கள் கூட்டமைப்புப் பற்றி ஐயம் கொள்ளக்கூடாதென்பதற்காகக் கூட்டமைப்பு தாங்கள் தமிழரின் அபிலாஷையை வலியுறுத்துபவர்கள்.

சின்னச்சின்ன வேலைத்திட்டங்களையும், வேலை வாய்ப்புகளையும் பெற்றுத்தரும் பிழைப்புவாத அரசியலை நடத்துபவர்கள் அல்ல என்பதை மக்களுக்கு விளக்கமாகச் சொல்லவேண்டும்.

அரசியல்ரீதியாகத் தமிழினம் ஓரணியில் திரள்வதற்கான வழியைக் கூட்டமைப்பு ஏற்படுத்தும் என்பதை - மக்களுக்கு வலியுறுத்துவது - வாக்குச் சிதறலைத் தடுக்கும். வாக்குகளை உதிரிகளாக ஆக்கிவிடாமல் தடுப்பதன்மூலம், பிரித்தாள நினைப்பவர்களுக்குப் பிடரியடி கொடுக்கலாம்.

நீண்ட போரினால் மக்கள் மனம் சோர்ந்துள்ளனர். தாம் நினைத்ததைச் செய்யலாம் எனக் களமிறங்கிய பேரினவாதிகளும், அவர்களுக்கு ஆதரவானவர்களும் 2001 ஆம் ஆண்டு நினைத்தது நடைபெறவில்லை என்பதைப் புரிந்துகொள்ளும் வகையில் மக்கள் பதிலளித்தார்கள்.

அந்த மக்களின் எண்ணங்கள், சிந்தனைகளை இன்னும் ஒருமைப்படுத்த கூட்டமைப்பு தவறக்கூடாது.



அபபடிச் செய்தால் வெற்றி தமிழ்க் கூட்டமைப்புக்கேதான்.

அப்படியொரு வெற்றிக்காகப் பாடுபட வேண்டிய பொறுப்பை - பொறுப்புணர்வுடன் நாம் எடுக்க பின்நிற்கக்கூடாது என பதை அறிந்தும், அறியாதவர்களாக இருக்கக் கூடாது. அதனை அனைத்துத் தரப்பினரும் காலமுணர்ந்து செய்யவேண்டும். அப்பொழுது தான் பெரும்பான்மையாக மக்களை ஒன்றுதிரடடி, அபிலாஷை என்ன என பதைத் தோதலையும் பயன்படுத்திச் சாதிக்க வேண்டும்.

பொங்குதமிழில் தமிழினம் - தனது அரசியல் அபிலாஷையினை வெளிப்படுத்த மக்களைத் திரட்டியது.

பொங்குதமிழில் மக்கள் திரண்டுவந்து கேட்டதற்கு ஆதரவானதுதான் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு என்பதைக்கூட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மக்களுக்குத் தெளிவுபடுத்துவதையும் தவறவிடக்கூடாது. இதன்மூலமும் நன்மையினையே கூட்டமைப்புப் பெறும். பொங்குதமிழுக்கு மக்கள் பொங்கிவந்து ஆதரவு தந்தார்கள். அதுபோலவே தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு ஆதரவு கிடைக்கவேண்டும்.

இதற்குக் கூட்டமைப்புத் தாம் யார் என்பதைச் சொல்வதற்கு, கூடுதலான உழைப்பைச் செலுத்தவேண்டும். இதில் பரப்புரை அவசியமானது. தமது அடையாளத்தைக் காப்பது அவசியமானது. சின்னத்தைத் தேர்தலில் முன்னிலைப்படுத்துவது எவ்வளவு அவசியமோ, அதனிலும் அவசியமானது தனது அடையாளத்தைக் காண்பிப்பது. இது இலகுவான காரியமல்ல.

இதனைக் கவனிக்காது, விடுதலைப் புலிகளை நாம் ஆதரிக்கின்றோம், எம்மை விடுதலைப் புலிகள் ஆதரிக்கின்றார்கள் என அனைததையும் கிடப்பில் போட்டுவிட்டு, கை கூப்பி வணங்கி நிற்கும் புகைப்படங்களுடனான சுவரொட்டிகளை ஒட்டிவிடுவதுபோன்ற உணர்வை, அடையாளத்தைக் காண்பிக்காது.

மக்களுக்கு நாம் யார் என்பதை சரியான முறையில் காண்பிப்பது, மக்களிடம் இருக்கும் சில ஐயப்பாடுகளைக்களையும். அப்படியானவையூடாக மக்களைச் சரியான வழியில் நடைபோட வைக்கமுடியும்.

எம்மை நாம் யாரென்று வெளிச்செல்வதற்குத் தயங்குவோம் என்றால், எம்மை ஆதரிக்க மக்கள் தயங்குவார்கள். மக்களுக்குள் அந்தத் தயக்கம் களைவது வெற்றியை அதிகரிக்கும்.

தமிழித்தேசியம் பற்றி அரசியல்ரீதியான வலுவை அதிகரிக்கவேண்டியது அனைத்துலகரீதியான நோக்குதலுக்குள்ளும் நகர்கின்றது. ஆகவே, இன்றையநிலைமையில் கூட்டமைப்பு அனைத்துலக சமூகத்துக்கு தமிழரின் அரசியல் வலுவை விளக்கவேண்டும்.

தமிழ்த்தேசியம் எழுச்சிகொள்வதற்கு உந்து சக்தியாக உருவாகியிருக்கும் கூட்டமைப்பு - இம்முறை புதியவர்களையும் உள்வாகியுள்ளது. இவை ஆரோக்கியமானதே. இந்த நிலைப்பாட்டைத் தக்கவைத்துக்கொள்வதுடன், தாயகத்தின் மக்கள் உணர்வை ஒன்றுதிரட்டி, தென்னிலங்கைக்குப் பதில் சொல்வதுடன், அனைத்துலக சமூகத்துக்கு எமது அபிலாஷையினை வலியுறுத்துவதற்கு இந்தத் தேர்தலைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பயன்படுத்தவேண்டும். அதற்கு மக்கள் முழுமையான ஆதரவை வழங்கவேண்டும். அதனை மக்களே! செய்வீர்களா?

மனோன்மணி சண்முகதாஸ்

# அரவணைக்கும் அன்புக்கரங்கள்

இன்று உலகெங்கும் சிறுவர்களின் நிறைவாழ்வு பற்றியே பேசப்படுகிறது.

குறிப்பாக ஆதரவற்ற குழந்தைகளின் நலன்களைப் பேணுவதற்குப் பல அரசார்பற்ற நிறவனங்களும் முயற்சிசெய்து வருகின்றன.

சிறுவர்கள் தமது பெற்றோரது பாதுகாவலிலேதான் மகிழ்வாக இருப்பார்கள். தங்களைக் கவனிப்பதற்கும், வழிநடத்துவதற்கும் ஒருவர் இருக்கிறார் என்ற எண்ணம் தான் அவர்களை ஆற்றல் பெற்றவர்களாக்கும்.

ஒப்பீட்டு நிலையில் ஒவ்வொரு குடும்பத்துக் குழந்தையும் - பெற்றோரின் அரவணைப்பபையும், பிறரது செயற்பாட்டையும் கணித்துக் கொண்டிருக்கும். அன்பையும், பரிவையும் எல்லோரிடமும் எதிர்பார்க்கும்.

கடந்தகாலப் போர்ச்சூழலும், இடப்பெயர்வும் சிறுவர்களைக் குடும்பங்களிலிருந்து பிரிந்துள்ளன.

தொழில்வாய்ப்பு இல்லாமையால், வறுமை ஏற்பட்டுச் சிறார் பெரிதும் பாதிப்புற்றனர். இடப்பெயர்வால் சொந்த வீடுகளை விட்டு வெளியேறி, முகாம்களில் வாழநேர்ந்தது. அடிப்படையான வாழ்க்கை வசதிகளே இல்லாத வாழ்விடங்களில்- தொற்று நோய்களாலும் பீடிக்கப்பட்டனர்.

சிறுவர்களை இத்தகைய துன்பமான சூழலிருந்து விடுவிக்க, பெற்றோர் - சிறுவர் இல்லங்களை நாடுகின்றனர். பெற்றோரை விட்டுப் பிரிய விரும்பாத சிறுவர்கள் - மனமின்றியே சிறுவர் இல்லத்து வாழ்க்கையை ஏற்கின்றார்கள்.

அவர்களுக்கு ஒரு மகிழ்வான தங்குமிடத்தை வழங்குவதற்கு, இல்லத்தை நடத்துவோர் முன்வரவேண்டும். ஆனால், பொருள் வளம் இன்மையால் இந்தச் செயற்பாடு நடைபெற வாய்ப்பு இல்லை.

எனினும், தொண்டு நிறுவனங்கள் - இல்லங்களோடு இணைந்து இந்தச் செயற்பாட்டை நடைமுறைப் படுத்தலாம்.

அரிமாக்கழகம் இத்தகைய பணியை நீண்டகாலமாகச் செய்து வருகின்றது. சிறுவர் இல்லங்களோடு தொடர்புகொண்டு, அவற்றின் இன்றியமையாத தேவைகளை நிறைவேற்றி வருகிறது.

வட்டுக்கோட்டை, மானிப்பாய், நல்லூர், திருநெல்வேலி , பருத்தித்துறை, சாவகச்சேரி போன்ற இடத்தில் உள்ள அரிமாக்கழகங்கள் - இத்தகைய பணியிலேயே முனைப்பாக நிற்கின்றன.

இல்லச் சிறார்களது உள்ளத்திலே, உறைந்து கிடக்கும் ஆவலை இளகச் செய்ய, நல்ல பரிசுகளை வழங்கி வருகின்றன.

இந்தக் கழகம் தனது உத்தியோகபூர்வமான செயற்பாடுகளை இவ்வில்லங்களிலே வைப்பதும் இதற்கு நல்லதோர் எடுத்துக்காட்டு.

அரிமாக்கழக அங்கத்தவர் சிறார்களோடு உடனிருந்து, அவர்கள் உள்ளத்திலே சேவையின் நினைவை நிறுத்துகின்றனர்.

பாடசாலை உபகரணங்களையும், விளையாட்டு உபகரணங்களையும் எல்லாச்சிறார்களுக்கும் வழங்கி அவர்களை மகிழ்விக்கின்றனர்.

இதுவே, சிறாரின் உளவளம் பொலிய சிறந்த செயற்பாடாகும். சிறுவர் நிறைவாழ்வு அரிமாக்கழகத்தின் உன்னதமான பணிளால் உலகெங்கும் பேசப்படுகிறது.

உலகச் சிறுவர்களை எல்லாம் இணைக்கின்றது.

எஸ்.ஜெயா

# மூளையும், கணினியும் நண்பர்கள்



மருத்துவத்துறையில் ஒரு புதிய கண்டுபிடிப்பு வெளிவந்துள்ளது. உடல் உறுப்புக்கள் செயலிழந்து, பேசவும் முடியாதவர்கள் - வெளியுலகத்துடனான தகவல் தொடர்புகளை மேற்கொள்வதற்காகப் புதிய முறை ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்டவரின் மூளையில் உள்ள இலத்திரனியல் சாதனம் (Electronic Device) ஒன்று பொருத்தப்பட்டுள்ளது. இந்தச் சாதனம் மூளையினுடைய சமிக்ஞைகளை (Signal) பெரிதாக்கி, அவற்றைத் தலையில் பொருத்தப்பட்ட ஒரு சிறிய அன்ரனா (Antenna) மூலம், முன்னுள்ள கணினி (Computer) க்கு அனுப்புகின்றது.

இந்தச் சமிக்ஞைகளால் கணினி உள்ள கேசர் (**Cursor**) ஐக் கட்டுப்படுத்துவதன் ஊடாகச் சில அடிப்படைச் செய்திகளைப் பரிமாற்றக்கூடியதாக உள்ளது.

இந்த வகையில், மூளையானது ஒரு கணினி மௌஸ் (**Mouse**) இத்தொழிற்பாட்டைச் செய்கின்றது. அமெரிக்காவின் **EMORY** பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த வைத்திய நிபுணரான Dr.RoyBakay, Dr.Philip kennedy ஆகியயோரால் கண்டுபிடிக்கப்பட்டது. எதிர்காலத்தில் இத்தொழில் நுட்பத்தை மேலும் விரிவாக்குவதன் மூலம் பாதிக்கப்பட்டவர்களால் மின்னஞ்சல் அனுப்பவும், கணினிகளில் கடிதங்கள் எழுதவும், அறையின் மின்விளக்குகளை அணைககவும் முடியும் என இந்த நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தக் கண்டுபிடிப்புத் தொழில்நுட்பம் இலங்கை வருமாயின். ஈழத்தில் அநாதரவாக விடப்பட்ட, செயல் இழந்த முதியோர்கள் எவ்வளவு பயன்படுவர்கள் அல்லவா. இது புதிய உறவுகளை விட்டு வெளிநாட்டில் வசிப்பவர்களுக்கு வரப்பிரசாதமாகும்.

உலக நோக்கு

# பிலிப்பைன்ஸ் நடுக்கடலில் சென்ற கப்பலில் தீ: 665 பயணிகள் தப்பினர்


பிலிப்பைன்ஸ் நாட்டின் மணிலா நகரிலிருந்து பயணிகளை ஏற்றிக்கொண்டு சூப்பர் பெரி என்ற கப்பல் புறப்பட்டு சென்றது. அந்தச் சொகுசு சுற்றுலா கப்பலில் 800 இற்கும் மேற்பட்ட பயணிகளும், கபபல் ஊழியர்களும் இருந்தனர்

மணிலா அருகே உள்ள கோரி ஜிடார் தீவுப் பகுதியைநோக்கிச் சென்றுகொண்டிருந்த அந்தக் கப்பலில் திடீரென்று தீப்பிடித்தது. கப்பலின் சமையல் அறையில் பிடித்த தீ மளமளவென மற்ற பகுதிகளுக்கும் பரவியது. கப்பல் முழுவதும் தீப்பற்றி எரிந்தது. பயணிகள் தீயில் சிக்கிக்கொண்டு உயிருக்குப் போராடினார்கள்.

அப்போது அந்த வழியாக வந்த சரக்கு கப்பல் மற்றும் படகுகளில் வந்தவர்கள் தீப்பிடித்த கப்பலில் இருந்தவர்களைக் காப்பாற்றினார்கள். தீக்குப் பயந்து கடலில் குதித்தவர்களையும் மீட்டனர்.


655 பயணிகளை சரக்கு கப்பல் பத்திரமாக காப்பாற்றி விட்டது. 8 பயணிகள் தீக்காயங்களுடன் மீட்கப்பட்டனர். ஒரு பயணி மட்டும் தீயில்கருகி இறந்து விட்டதாகத் தகவல் கிடைத்துள்ளது.

இன்னும் சிலரைக் காணவில்லை. அவர்கள் கடலில் குதித்து தப்பி



விட்டார்களா? அல்லது கடலில் மூழ்கிப் பலியாகிவிட்டார்களா என்பது தெரியவில்லை. தகவல் கிடைத்ததும் மீட்புப் படையினர் அந்தப் பகுதிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். ஹெலிகொப்டரிலும், படகுகளிலும் அவர்கள் தேடிவருகிறார்கள்.

## 3000 இற்கு மேற்பட்ட குண்டுகளை லிபிய அரசு அழிக்க தீர்மானம்!



இரசாயன வெடிபொருட்கள் நிரப்பப்படாத 3000 இற்கும் மேற்பட்ட குண்டுகளை லிபியா அழித்துவிடுவதற்குத் தீர்மானித்துள்ளது. இரசாயன ஆயுதங்களைத் தடைசெய்யும் அமைப்பொன்றின் மேற்பார்வையில் இக்குண்டுகள் அழிக்கப்படவுள்ளன. இதன்மூலம் லிபியா முற்றாகவே இரசாயன ஆயுதங்களின் பாவனைகளை நிறுத்தியுள்ளதென அறிவிக்கவுள்ளது.

"கோக்' கை தலைமையகமாகக் கொண்டுள்ள இவ்வமைப்பு மார்ச் மாதம் 5 ஆம் திகதிவரை இந்தக் குண்டுகளை அழித்துவிடுவதற்கான செயற்பாடுகளைத் தொடருமெனத் தெரிவித்துள்ளது.

1993 ஜனவரி மாதம் இரசாயன ஆயுதங்களை அழிப்பது தொடர்பான முதலாவது மாநாடு ஆரம்பிக்கப்பட்டது. இதுவரை 160 நாடுகள் இந்த அமைப்பில் இணைந்துள்ளன.

# கெயிட்டி ஜனாதிபதி தனது நிலையை நன்கு ஆராய்ந்து பார்க்கவேண்டும்!

## அமெரிக்க ராஜாங்கச் செயலர் கொலின் பவல் தெரிவிப்பு



கெயிட்டியில் அதிகரித்துவரும் பிரச்சினைகள் தொடர்பாக ஜனாதிபதி ஜீன் பேட்ராண்ட் அரிஷ்டைப் தனது இன்றைய நிலையை நன்கு ஆராயவேண்டும் என அமெரிக்க ராஜாங்க அமைச்சர் கொலின் பவல் தெரிவித்திருக்கிறார்.

கெயிட்டியில் லஞ்சம், திறமையின்மை அதிகரித்துள்ளமையால் ஜனாதிபதி சிறந்தமுறையில் மக்களுக்குச் சேவைசெய்யமுடியுமா என்பதை ஆராயவேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவிதததார். இக கருத்துக்கள் மூலம் ஜனாதிபதி ஜீன் அரிஷ்டைப் பதவிவிலகக வேண்டும் என அமெரிக்கா விரும்புவதாக பி.பி.சியின் ஜோன் லெயின் தெரிவித்தார்.

இதனிடையே கெயிட்டியின் அருகில் அமைந்துள்ள கரபியன் நாடுகள் அமெரிக்க - ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையிடம் கெயிட்டியில் தோன்றியுள்ள பாதுகாப்பு பிரச்சினைக்கு தீர்வுகாண்பதற்கு முன்வரவேண்டும் என வேண்டுகோள் விடுத்திருந்தன. அண்மையில் ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபையினால் அவசரமாக ஒழுங்கு செயயப்பட்ட கூட்டத்தில் சர்வதேச படையை அனுப்பு வதற்கான தீர்மானங்கள ஆராயப்பட்டன. ஆனால் முடிவுகள் எவையும் தெரிவிக்கப்படவில்லை.


மேலும் கெயிட்டியின் போராளிக் குழுக்கள் ஜனாதிபதி அரிஷ்டைப் பதவியிலிருந்து விலகவேண்டும் என தொடர்ந்து தெரிவித்து வருகின்றனர். இப் போராளிக் குழுவினர் சர்வதேச பேச்சுவார்த்தைகளிலோ அல்லது அரசாங்கத்துடனோ இதுவரை எதுவித தொடர்புகளையும் ஏற்படுத்திக் கொள்ளவில்லை.

போராளிக் குழுத்தலைவரான கை பிபிப்பி கருத்துத் தெரிவிக்கையில் - ஜனாதிபதி அரிஷ்டை அரச இல்லத்திலிருந்து வெளியேறுமாறு கேட்டுள்ளதாகவும், விரைவில் அந்த இல்லத்தின்மீது தாக்குதல் மேற்கொள்ள இருப்பதாகவும் தெரிவித்தார்.

இதனிடையே கெயிட்டியின் மூன்றாவது பெரிய நகரான கேயிஷ் போராளிகளினால் கைப்பற்றப்பட்டுள்ளது. போராளிகளினால் கைப்பற்றப்பட்ட முதலாவது தென்பகுதி நகரம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் தலைநகர் தாக்கப்படும் என்ற அச்சத்தினால் ஜனாதிபதிக்கு விசுவாசமான படையினர் பாதைத்தடைகளை ஏற்படுத்தி அவரது இல்லத்தின் முன்பாக காவல் கடமையில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## புற்றுநோயைக் குணப்படுத்தும் மருந்தை தயாரிக்க அமெரிக்க அரசு அனுமதி!



புதிய முறையில் புற்றுநோயை குணப்படுத்தக்கூடிய அவஷ்ரின் என்ற மருந்தை தயாரிப்பதற்கு அமெரிக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது. குடற்புற்றுநோயால் தாக்கப்பட்டவர்களுக்கும் இந்த மருந்து பரீட்சித்துப் பார்க்கப்பட்டது.

குடற்புற்று நோயால் பாதிக்கப்பட்ட கலங்களுக்கு இரத்தம் செல்லவிடாது தடுப்பதன் மூலம் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட கலங்களின் வளர்ச்சியை இந்த மருந்து தடைசெய்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை ரேடியோக் கதிர்வீச்சைக் கொண்ட ரேடிய மருந்துகளை புற்றுநோயினால் பாதிக்கபடட கலங்களுக்குச் செலுத்துவதன் மூலம புற்றுநோயால் பாதிக்கப்பட்ட கலங்களை செயலிழக்கச் செய்திருந்தனர். புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இம்மருந்து புதிய மாற்றத்தை ஏற்படுத்தலாமென மேலும் தெரிவிக்கப்படுகிறது.

புற்றுநோயால் பாதிக்கப்பட்ட கலம் ஒன்று தொடர்ந்து பெருகிச் செல்வதற்கு ஒட்சிசனும் ஊட்டச் சத்துக்களும் தேவைப்படுகின்றன. ஆனால், அவஷ்ரின் என்ற புதிய மருந்து பாதிக்கப்பட்ட பகுதிகளில் புதிய இரத்தக் குழாய்கள் உருவாவதை தடைசெய்கின்றது.

புற்றுநோயால் பாதிக்கப்பட்டு இறுதி நிலையை அடைந்தவர்களை ஐந்து மாதங்களுக்கு மேல் இந்த மருந்துமூலம் உயிர் வாழச்செய்ய முடியுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.



அமெரிக்காவின் - கொலும்பைனில் மாணவன் ஒருவன், தனது வகுப்பு மாணவர்கள் 12 பேரையும், ஆசிரியரையும் கொலைசெய்தது தொடர்பாக அந்த நாட்டின் சட்டமா அதிபர் சம்பவத்தைக் கண்டித்து உரையாற்றுகிறார்.

## சிங்கப்பூரில் ஏவுகணைக் கண்காட்சி!

சிங்கப்பூரில் இராணுவ விமானங்கள் மற்றும் ஏவுகணைக் கண்காட்சி நடைபெற்று வருகிறது. 4 நாட்கள் நடைபெறும் இந்தக் கணகாடசியல் 33 நாடுகளைச் சேர்ந்த 750 நிறுவனங்கள் அரங்குகள் அமைத்துள்ளன.

உலகின் பல்வேறு நாடுகளில் இருந்தும் 23 ஆயிரம் இராணுவ அதிகாரிகள் இந்த இராணுவ வர்த்தகக் கண்காட்சிக்கு வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



## ஜப்பானில் மதத்தலைவருக்கு மரணதண்டனை விதிப்பு!



(ரோக்கியோ)

ஜப்பானின் மத தலைவர் ஒருவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

மதத்தலைவர் சோகோ அசகரா - 1995 ஆம் ஆண்டு ரோக்கியோவில் அமைந்துள்ள பாதாள ரயிலில் நச்சுவாயுத் தாக்குதலை மேற்கொண்டிருந்தார். இந்தத் தாக்குதலில் 12 பொதுமக்கள் கொல்லப்பட்டும், 1000 இற்கும் மேற்பட்டவர்கள் பாதிப்படைந்திருந்தனர்.

இந்தத் தாக்குதல் ஜப்பானிய அரசை அதிர்ச்சிக்குள்ளாக்கியிருந்தது. இந்த மத இயக்க உறுப்பினர்கள் உயிரியல் இரசாயன பொருட்களை மனிதப் படுகொலைக்குப் பாவித்து வந்தனர்.


இந்தத் தாக்குதலிலிருந்து தப்பிக்கொண்டவர்கள் தலையிடி, தலைச்சுற்றல் சுவாசக் கோளாறினால் பாதிக்கப்பட்டிருந்தனர்.


நீதிமன்றில் இந்த விசாரணையைப் பார்வையிடுவதற்கு அதிகளவிலான மக்கள் கூடியிருந்தனர்.

விசாரணை நடைபெற்ற நேரத்தில் இந்த மத இயக்கத் தலைவருக்காக வாதாடிய சட்டத்தரணி - சோகோவிற்குத் தெரியாமலேயே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிவித்தார்.

மத இயக்கத் தலைவரான சோகோ இந்த வகையான தாக்குதலுக்கு அங்கத்தவர்களை வழிநடத்தினார் எனத் தெரிவிக்கப்படவில்லை. இவரது மத இயக்கத்தில் பௌத்தர்கள், இந்துக்கள், கிறிஸ்தவர்கள் அங்கத்தவர்களாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ரொசட்டா விண்கலத்தின் பயணம் இரண்டாவது தடவையும் நிறுத்தம்





வால் நட்சத்திரம் ஒன்றில் இறங்கவுள்ள ரொசட்டா விண்கலத்தின் பயணம் இரண்டாவது தடவையும் நிறுத்தப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் பிரன்சுகயானாவிலிருந்து இக்கலம் புறப்படுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. காலநிலையில் ஏற்பட்டிருந்த மாற்றம் காரணமாக நேற்றுவரை தாமதிக்கவேண்டியிருந்தது.

விண்கலம் ரொசெட்டா, ஆர்யுமோவ் கெரசிமென்கோ எனப்படும் வால்வெள்ளியை 2014 இல் அடைவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

எரிசக்தி வழங்கும் தாங்கியிலும் சிறு தவறு காணப்பட்டதாகவும், அத்திட்டத்தின் அதிகாரி ஒருவர் ஏ.எப்.பி செய்திஸ்தாபனத்திற்குத் தெரிவித்தார். மார்ச் மாதம் 17 ஆம் திகதி வரை இக்கலத்தை வால் வெள்ளிக்கு அனுப்பும் முயற்சிகள் தொடரலாமெனவும், அந்தத் திகதிக்கு பின் பூமியின் சுழற்சியில் ஏற்படும் மாற்றத்தினால் ரொசெட்டா கலத்திற்குத் தேவைப்படும் எரிசக்திச்செலவு அதிகரிக்கலாமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் வால்வெள்ளிக்குச் செல்லவுள்ள துணைக்கலம் - ரொசெட்டா பூமியிலிருந்து புறப்பட்ட 4 மணித்தியாலங்களின் பின்னர் பிரிந்து தனது வால்வெள்ளிக்கான பயணத்தை ஆரம்பிக்கும். 10 ஆண்டுகள் தொடரும் பயணத்தின்பின் வால்வெள்ளியை 2014 மே அல்லது ஜூன் மாதத்தல் அடையலாமென எதிர்பார்க்கப்படுகிறது. தனது பயண காலப் பகுதியில் பூமியை நான்கு முறை இது சுற்றி வரலாமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# காணாமற்போனோர் கதி என்ன?
# விபரம் தராததைக் கண்டித்து
# நாளை மறுதினம் மறியல்!

செம்மணி புதைகுழி விடயங்கள் தொடர்பாக கொழும்பு மனித உரிமைகள் ஆணைக்குழுவினரும், யாழ்.மனித உரிமைகள் ஆணைக் குழுவினரும் சரியான விபரங்களைத் பெற்றுத்தராமையைக் கண்டித்து அன்னையர் முன்னணியும், பாதுகாவலர் சங்கமும் இணைந்து மார்ச் மாதம் முதலாம் திகதி மறியற் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

படையினரால் கைதுசெய்யப் பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த சின்னத்தம்பி சிவகுமாரை பிணையில் விட்டபோது அனுராதபுரம் மஜிஸ்ரேட் நீதிமன்றில் பிணை எடுத்தவர் பெயரையும் அந்த வழக்கில் இலக்கத்தையும் பெற்றுத்தரும்படிகோரியும் நடத்திய விசாரணைகள் எதனையும் கொழும்பு மற்றும் யாழ்ப்பாணம் மனித உரிமைகள் ஆணைக்குழுவினரும் பெற்றுத் தராமையை கண்டித்தே மறியற் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஐ.தே.க - மலையக மக்கள் முன்னணி புரிந்துணர்வு உடன்பாடு கைச்சாத்து

மலையக மக்கள் முன்னணிக்கும் ஐக்கிய தேசியக்கட்சிக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று நேற்று முன்தினம் கைச்சாத்திடப்பட்டது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் முன்னிலையில் மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் அமைச்சருமான சந்திரசேகரனும், ஐக்கிய தேசியக்கட்சி சார்பில் அதன் தவிசாளர் மலிக் சமரவிக்கிரமவும் இந்த உடன்பாட்டில் கைச்சாத்திட்டனர்.

இதன்படி நாடாளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் மலையக மக்கள் முன்னணி தனித்துவமாகவும், சுதந்திரமாகவும் செயற்படும் மலையக மக்கள் அரசியல் உரிமைகளுக்காக செயற்படும் திட்டங்கள் இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் மலையக மக்கள் முன்னணி தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் கண்டியில் நடைபெற்ற ஐக்கிய தேசியக்கட்சியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்திலேயே இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப் பட்டது.

## இரு சிரேஷ்ட படையதிகாரிகள் மேஜர் ஜெனரலாகப் பதவியுயர்வு

இலங்கை இராணுவத்தின் இரண்டு சிரேஷ்ட அதிகாரிகளுக்கு வழங்கப்பட்ட தற்காலிக பதவியுயர்வுகளை - 2002 ஆம் ஆண்டு முதல் நிரந்தரமாக்கி பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத் வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளார்.

பிரிகேடியர் சீவன வனிதசேகர மற்றும் பிரிகேடியர் காமினி பண்டார விஜயரத்ன ஜெயதந்தா ஆகியோர் கடந்த 2003 ஆம் ஆண்டு மே 13 ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் மூலமாக தற்காலிக மேஜர் ஜெனரல்களாக பதவியுயர்த்தப்பட்டிருந்தனர்.

இவர்களின் இந்தத் தற்காலிக பதவியுயர்வையே பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத் 2002 ஜூன் 30 ஆம் திகதி முதல் நிரந்தரமாக்கவுள்ளதாக அறிவித்துள்ளார்.

### விபத்தில் உயிரிழந்த வயோதிபர் காரைநகர் வாசி

(யாழ்ப்பாணம்)

லொறியுடன் மோதியதனால் மரணமடைந்த முதியவரின் சடலம் நேற்று இனங்காணப்பட்டது.

கடந்த புதனன்று யாழ்.சத்திரத்துச் சந்தியில் நடைபெற்ற லொறியுடனான மோதல் சம்பவத்தில் உயிரிழந்தவர் இராடு கந்தசாமி (வயது 60) காரைநகரைச் சேர்ந்தவர் என இனங் காணப்பட்டார்.

கந்தசாமியின் உடலை நேற்றுக் காலை திருமதி கமலா அம்மாள் கந்தசாமியே இனங்காட்டினார். வயோதிபரான கந்தசாமி காரைநகரில் இருந்து தனது சொந்தத் தேவையின் நிமித்தம் யாழ்நகர் வந்த சமயமே இந்தச் சம்பவம் நடைபெற்றது.

## பேச்சு குறித்த நிலைப்பாட்டினால் சுதந்திர முன்னணிக்கு ஆதரவு!

### ஈ.பி.டி.பி கூறுகிறது

(கொழும்பு)

நாட்டின் இனப்பிரச்சினையைத் தீர்க்கும் நடவடிக்கையில் அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்குவதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ளமையால் தமது கட்சி அதற்கு ஆதரவு வழங்குகிறது.

இவ்வாறு ஈ.பி.டி.பியின் பேச்சாளர் எஸ்.தவராஜா தெரிவித்தார்.

செய்தி ஊடகம் ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே இவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது- பொதுஜன ஐக்கிய முன்னணியும் மக்கள் விடுதலை முன்னணியும் செய்துகொண்ட ஒப்பந்தத்தில் விடுதலைப் புலிகள் உட்பட அனைத்துக் கட்சிகளுடனும் தாம் பேச்சு வார்த்தை நடத்துவதாகக் குறிப்பிட்டிருந்தனர்.

இவ்வாறு அனைத்துக் கட்சிகளுடனும் தாம் பேசுவதாகக் குறிப்பிட்டதாலேயே ஈ.பி.டி.பி ஆதரவு வழங்கத் தீர்மானித்துள்ளது.

இந்தப் புரிந்துணர்வு உடன்படிக்கை நேர்மையானது என்றும் அதற்கு உடன்பட்டு சுதந்திர முன்னணியினர் நடப்பார்கள் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு. அதனாலேயே நாம் ஆதரவளித்தோம என அவர் தெரிவித்தார்.

## வீடு சின்னத்திற்கு எதிராக...

நேற்று பி.பி.சி தமிழோசைக்குப் பேட்டியளித்தார். இந்தப் பேட்டியில் அவர் மேலும் கருத்து வெளியிடுகையில் -

நான் தமிழரசுக் கட்சியின் தலைவராகவே இருக்கிறேன். தமிழரசுக் கட்சியின் வீடு சின்னத்தை தமிழ்தேசிய கூட்டமைப்பு தேர்தலுக்கு பயன்படுத்துவதற்கு - தமிழரசுக்கட்சியின் நிர்வாக சபை கூடி ஆராய்ந்து அனுமதி வழங்கியிருக்கவேண்டும்.

ஆனால், தமிழ்தேசிய கூட்டமைப்பினர் தன்னிச்சையாக வீடு சின்னத்தை தேர்தலுக்கு பயன்படுத்துகின்றனர்.

இந்தநிலையில் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்வதற்கான காலப்பகுதி முடிவடைந்திருப்பதால் இந்தத்தேர்தலில் வீடு சின்னத்தில் போட்டியிடுவதைத் தடைசெய்ய முடியாது.

இதனால், இப்படிப்பட்ட பிரச்சினைகள் இனி மேலும் எழக்கூடாது என்பதற்காகவே உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

### யுத்தம் பாதித்த...

தான நடவடிக்கைகளுக்காக நோர்வே அரசாங்கம் இதுவரை ஆற்றியுள்ள பயன்மிக்க நடவடிக்கைகள், பாராட்டுக்குரியது. இந்த நாடு இலங்கையின் சமாதான நடவடிக்கைகளை மீண்டும் முன்னெடுத்துச் செல்ல நடவடிக்கை எடுக்கும்.

2002 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் செய்துகொள்ளப்பட்ட யுத்த நிறுத்த உடன்படிக்கை தொடர்ந்தும் நடைமுறையில் இருப்பது மகிழ்ச்சிக்குரியது. அத்துடன் இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் சேவையும் பாராட்டுக்குரியது என கோபி அனான் தெரிவித்தார்.

### சமாதான...

பாடுபடும்.

அத்துடன் அரசாங்கத்திற்கும் - விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நின்று போயுள்ள சமாதான முயற்சி ஏப்ரல் இரண்டாம் திகதி நடைபெறவுள்ள தேர்தலின் பின்னர் விரைவில் ஆரம்பிக்கப்படுமென தான் நம்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

### பாதுகாப்பு...

செய்து கொள்வது தொடர்பாக ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கமே பேச்சுக்களை ஆரம்பித்தது.

பாதுகாப்பு அமைச்சை ஜனாதிபதி பொறுப்பேற்றுக் கொண்ட பின்னரும் இந்தப் பேச்சுக்கள் தொடர்ந்து இடம்பெற்றன. ஆனாலும் இறுதி முடிவை இந்தியாவே எடுக்க வேண்டும்.

இந்தியாவுடன் பேச்சு நடத்த இராணுவத்தளபதி சென்ற விடயம் குறித்து பிணக்குகள் எதுவும் ஏற்படவில்லை என்றும் அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் மேலும் தெரிவித்தார்.

## இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு...

இந்த விடயத்தில் சமாதானப் பேச்சுக்களை முன்னெடுக்கவில்லை.'

அவர்கள் சமாதான பேச்சுவார்த்தைகள் பற்றி ஜனாதிபதிக்கு அறிவிக்கத் தேவையில்லை என்பது போல் நடந்துகொண்டனர். இந்த முயற்சி தொடர்பாக அமைச்சர்கள் சிலருக்குக்கூட தெரியாமலுள்ளது.

தற்போது அமுலில் இருக்கும் யுத்த நிறுத்த உடன்படிக்கை தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சைப் பொறுப்பேற்ற பின்னர் யுத்தநிறுத்த நடவடிக்கைகள் வெற்றிகரமாக அமுல்செய்யப்பட்டு வருகின்றன.

சமாதான பேச்சுக்களை ஆரம்பித்த ஜனாதிபதி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் கீழ் அதனைத் தொடர்ந்து மேற்கொள்வார். அத்தகைய பேச்சுக்களுக்கான கால அட்டவணையை தயாரிப்பதற்கு பிரேரணைகள்கூட சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

இந்தப் பின்னணியில் வன்செயல்கள் எதுவும் இடம்பெறாமல் தேர்தலை நடத்தும் நம்பிக்கையை ஜனாதிபதி கொண்டுள்ளார் என அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் மேலும் தெரிவித்தார்.

### முறிகண்டி...

மூலம் தெரியவருவதாக தமிழீழ காவல்துறை வட்டராங்கள் தெரிவித்தன.

மேலதிக விசாரனையை தமிழீழ காவல் துறையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

### தமிழீழ...

மண்ணில் புதிய வீரர் சமூகம் ஒன்று வளர நீங்கள் ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்று க.வே.பாலகுமாரன் விளையாட்டு வீரர்களிடம் மேலும் கேட்டுக்கொண்டார்.

நேற்று மாலை நான்கு மணிக்கு ஆரம்பமான லெப்-கேணல் விக்ரர் ஞாபகார்த்த உதைபந்தாட்டப் போட்டியில் மன்னார் அணி 1-0 என்ற கோல கணக்கில் வவுனியா அணியை வென்றது.

இறுதியாக தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா தலைமையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் வடபோர்முனைகட்டளைத் தளபதி கேணல் தீபன், மேற்குபோர் முனை கட்டளைத் தளபதி கேணல் ஜெயம், மன்னார் மாவட்ட சிறப்புத் தளபதி லக்ஸ்மன், மாலதி படையணி சிறப்புத் தளபதி கேணல் விதுஷா, நீதி நிர்வாகப் பொறுப்பாளர் பரா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம், கிளிநொச்சி கல்விப் பணிப்பாளர் அரிய ரத்தினம் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## தேவை

1. அலுவலக செய்தியாளர் -
(அனுபவம் உள்ளவர்கள் மட்டும்)
2. பயிற்சிப் பத்திரிகையாளர் -
(க.பொ.த.உயர்தரம் சித்தி)
3. ஒப்பு நோக்குநர் -
(அனுபவமுள்ளவருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
க.பொ.த.உயர்தரம் சித்தியடைந்திருக்க வேண்டும் இரவிலும் பணியாற்றத் தயாராக இருக்க வேண்டும்)
4. பக்க வடிவமைப்பாளர் -
(அனுபவம் உள்ளவர்கள் மட்டும்)
5. கணினி தட்டெழுத்தாளர் -
(தமிழில் வேகமாக ரைப் செய்யக் கூடியவர்களாக இருத்தல் வேண்டும்.
6. பாதுகாப்பு உத்தியோகத்தர் -
(பாதுகாப்பு சேவையில் முன்அனுபவம்)
-மாநகர எல்லைக்குள் வசிக்க வேண்டும்.
-இரவிலும் கடமையாற்றத் தயாராக இருத்தல் வேண்டும்.
-வயது 25 வயதிற்கும் 50 வயதிற்கும் உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

மேற்படி வெற்றிடங்களுக்கான நேர்முகத்தேர்வு 03.03.2004 புதன் காலை 10 மணிக்கு 'நமது ஈழநாடு' அலுவலகத்தில் நடைபெறும். விண்ணப்பதாரிகள் உறவினர் அல்லாத இருவரின் நற்சான்றுப் பத்திரங்கள், கல்விச் சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.

நிர்வாக இயக்குனர்,
நமது ஈழநாடு.

## மஹஜன சம்பத பெறுபேறுகள்

சீட்டிழுப்பு இல: 1594 திகதி: 27.02.2004

வெற்றி இலக்கங்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| p | 7 | 5 | 1 | 9 | 9 | 4 |




இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 28.02.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.